
வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu

Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 19.02.2025 புதன்கிழமை இதழ் : 50 பக்கங்கள் : 12



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER ரியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும்
இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

# உள்ளூராட்சி தேர்தலை தமிழ் கட்சிகள் பொதுத்தளத்தில் சந்திக்க வேண்டும்!

## தமிழ் அரசின் பதில் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் அழைப்பு




யாழ்ப்பாணம், பெப்ரவரி 19

**காலச் சூழலுக்கு ஏற்ப அரசியல் களமும் அதற்கான முடிவுகளும் மாற்றம் பெறவேண்டியது அவசியமாகும். அதற்கேற்ப நடைபெறவுள்ள உள்ளூராட்சி தேர்தலில் தமிழ் அரசியல் பரப்பில் உள்ள கட்சிகள் அவரவர் கட்சிகளின் கொள்கைகள் மாறுபடாது பொதுத்தளத்தில் இணக்கப்பாட்டை ஏற்படுத்தி வடக்கு - கிழக்கிலுள்ள உள்ளூர் அதிகார சபைகளை வெற்றி கொள்வதற்கு சாதக நிலைகளை உருவாக்க வேண்டும் - இவ்வாறு இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பதில் தலைவர் சீ. வீ. கே. சிவஞானம் அழைப்பு விடுத்துள்ளார்.**

யாழ். ஊடக அமையத்தில் அவர் நேற்று செவ்வாய்க்கிழமை நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு அழைப்பு விடுத்தார்.

இந்த சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், தற்போது கடந்த காலங்களைப் போலல்லாது அரசியல் களம் மாற்றமடைந்துள்ளது. இந்த மாற்றம் தமிழ்த் தரப்பினரின் அரசியல் களத்தில் தீர்க்கமான முடிவுகளை எடுக்கவேண்டிய சூழல் உருவாகியுள்ளது.

இதேவேளை நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தலில் வடக்கு - கிழக்கிலுள்ள உள்ளூராட்சி மன்றங்கள் அனைத்தையும் தமிழ் அரசியல் புலம் சார்ந்த கட்சிகள் கைப்பற்ற வேண்டியது அவசியமாக உள்ளது. இந்த நிலையில், தமிழ் அரசியல் பரப்பிலுள்ள கட்சிகளின் கொள்கைகள், 11



## பாணின் விலை 10 ரூபா குறைப்பு!

கொழும்பு, பெப். 19

கோதுமை மா விலை குறைப்புக்கு அமைவாக பாண் ஒன்றின் விலையை 10 ரூபாவினால் குறைத்துள்ளதாக வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளது.

ஏனைய பேக்கரிப் பொருட்களின் விலைகளையும் குறைப்பதற்கு பேக்கரி உற்பத்தியாளர்கள் சங்கம் இணக்கம் தெரிவித்துள்ளதாக வர்த்தக அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

ஒரு கிலோ கிராம் கோதுமை மாவின் விலை 10 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதை அடுத்து இந்த நடவடிக்கை வந்துள்ளது. (அ)

## இந்தியாவை சீனா அச்சுறுத்துவதற்கு எங்களை பயன்படுத்த இடமளியோம்!

### யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் சம்மேளனம்




- பு.கஜிந்தன் -

யாழ்ப்பாணம், பெப். 19

“இந்திய மீனவர்களின் அத்துமீறிய இழுவை மடி படகுகளால் எமது மீனவர்கள் பாதிக்கப்படுகின்றனர். இந்த நிலையில், அதனைப் பயன்படுத்தி இந்தியாவின் தேசிய பாதுகாப்புக்கு சீனா அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் எம்மைப் பயன்படுத்த இடமளியோம்” - என்று 11

## சிறீதரனை கட்சியிலிருந்து வெளியேற்ற இடமில்லை!

### சிவஞானம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 19

சிறீதரனை கட்சியிலிருந்து வெளியேற்ற இடமளிக்கப்படாது என்று இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பதில் தலைவர் சீ. வீ. கே. சிவஞானம் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் அவர் நடத்திய ஊடக சந்திப்பில் செய்தியாளர்கள் எழுப்பிய 11

## கொத்து ரொட்டி விலை அதிகரிப்பு



கொழும்பு, பெப். 19

கொத்து ரொட்டி, ப்ரைட் றைஸ் என்பவற்றின் விலை 30 ரூபாயாலும் பால் தேநீரின் விலை 10 ரூபாயாலும் தேநீரின் விலை 5 ரூபாயாலும் நள்ளிரவு முதல் அதிகரித்துள்ளது.

2025ஆம் ஆண்டு வரவு - செலவு திட்டத்தில் அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கத்துக்கு எந்தவித சலுகையும் வழங்கப்படவில்லை. இதையடுத்தே இந்த விலை அதிகரிப்பு செய்யப்பட்டுள்ளதாக அகில இலங்கை சிற்றுண்டிச் சாலை உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. (ஐ)

## யுத்தமும் இல்லை ஆயுதமும் இல்லை எனினும் பாதுகாப்புக்கே அதிக நிதி!

### சிறீதரன் எம்.பி சுட்டிக்காட்டு

கொழும்பு, பெப். 19

நாட்டில் யுத்தம் இல்லை ஆயுதம் இல்லை. எனினும் பாதுகாப்புக்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் இராணுவத்துக்கே அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்தார்.

நேற்றைய பாராளுமன்ற அமர்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் 11

## சூரிய சக்தி மின் உற்பத்தியால் கிடைத்த அதிக மின்சாரமே மின்தடைக்கு காரணம்!

### இலங்கை மின்சார சபை

கொழும்பு, பெப். 19

சூரியசக்தி மூலமாகக் கிடைத்த அதிக மின்சாரமே நாடளாவிய ரீதியில் மின் தடைக்குக் காரணமாக அமைந்தது என்று இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

நாடளாவிய ரீதியில் கடந்த 9ஆம் திகதி சுமார் 5 மணி நேரம் மின் தடை ஏற்பட்டது. இத்தகைய நிலை மீண்டும் ஏற்படாமல் தடுக்கும் நோக்கில் குறுகிய - நீண்டகால தீர்வுகளை முன்வைத்து இலங்கை மின்சார சபை அறிக்கை ஒன்றை வெளியிட்டது.

அதில், சூரிய மின்னுற்பத்தி மூலம் கிடைத்த அதிக மின்சாரத்தால் 11

## ஆசிரியர் வெற்றிடங்கள் இந்த வருடம் நிரப்பப்படும்!

### பிரதமர் ஹரிணி சபையில் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 19

நாடளாவிய ரீதியில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு இந்த வருடத்துக்குள் நடவடிக்கை எடுக்கப்படும். அதேநேரம் ஆசிரியர் கலாசாலைகளில் இருந்து வெளியேறும் ஆசிரியர்களுக்கும் இந்த வருடத்துக்குள் நியமனங்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று பிரதமரும் கல்வி, உயர் 11

## சைக்கிளில் சென்றவர் டிப்பர் மோதி மரணம்!

### அரியாலையில் நேற்று சோகம்

யாழ்ப்பாணம், பெப். 19

சைக்கிளில் சென்று கொண்டிருந்தவரை பின்னால் வந்த டிப்பர் மோதியதில் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

ஏ - 09 வீதியில் அரியாலை - மாம்பழம் சந்தியில் நேற்று செவ்வாய்க்கிழமை பிற்பகலில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. இதில், 11

## எரிபொருள் வரியை குறைக்கவுள்ள அரசு!

கொழும்பு, பெப். 19

இலங்கையில் எரிபொருள் மீதான வரியை அரசாங்கம் நிச்சயமாக குறைக்கும் என அரசாங்கத்தின் பிரதம கொறடாவும் அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ உறுதியளித்துள்ளார்.

அத்துடன், இது தொடர்பான நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். 11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்ஜெட்டில் எமக்கு ஒதுக்கிய நிதியை நாம் முழுமையாக செலவிட வேண்டும்!



## வடக்கு ஆளுநர் வேதநாயகன்

யாழ்ப்பாணம், பெப். 19

எமக்கு ஒதுக்கப்பட்ட நிதியை நாம் முழுமையாக செலவு செய்து மேலதிக நிதியை நாம் கோரவேண்டும் என தெரிவித்த வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் வடக்கு மாகாணத்துக்கு அதிக நிதி ஒதுக்கியதற்கு ஜனாதிபதிக்கு நன்றிகளையும் தெரிவித்தார்.

வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் திட்ட மீளாய்வு கலந்துரையாடல் ஆளுநர் செயலகத்தில் நேற்று நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலின் போதே ஆளுநர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க வாக்குறுதியளித்தவாறு வடக்கு மாகாணத்துக்கு பல்வேறு திட்டங்களுக்கு பெருமளவு நிதி ஒதுக்கியுள்ளார். அவருக்கு எமது வடக்கு மக்கள் சார்பாக நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் ஜனாதிபதியால் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது. வடக்கு மாகாணத்துக்கு பல்வேறு வகையிலும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அதிகளவான நிதியும் வடக்கு மாகாண சபைக்கே ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் ஜனாதிபதி தனது உரையில், வடக்கு அதிகாரிகள் கோரிய நிதியையே வழங்கியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

எமக்கு ஒதுக்கப்பட்ட நிதியை நாம் முழுமையாகச் செலவு செய்யவேண்டும். எவ்வளவு விரைவாக அந்த நிதியை செலவு செய்து முடித்து மேலதிக நிதியை நாம் கோர வேண்டும். இது எமக்கு சவாலானதுதான். நாம் நிதியை திருப்பி அனுப்பாமலே நிதியை திருப்பி அனுப்பியதான குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டு வருகின்றது. இந்த நிலையில், பெருமளவு நிதி எமக்கு கிடைக்கப்பெறும் நிலையில் அதை உரிய முறையில் செலவு செய்ய வேண்டும். எமது செயல்பாடுகளை ஊடகங்கள் உட்பட பல தரப்புகளும் உன்னிப்பாக கவனித்துக் கொண்டிருக்கின்றன. எனவே, வெளிப்படைத் தன்மையாக நிதியை விரைவாக செலவு செய்யவேண்டும்.

ஜனாதிபதியால் வீதி அபிவிருத்திக்காக விசேட நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அந்த நிதியை வடக்கின் அனைத்து மாவட்டங்களுக்கு சமமாகப் பகிரத் தேவையில்லை. தேவைப்பாடுகள் எங்கு அதிகமோ அங்கு அதிகளவு நிதியை ஒதுக்குங்கள். இந்தத் திட்டத்துக்கு யாழ்ப்பாணத்திலிருந்து கொண்டு தெரிவுகளை முன்னெடுக்காமல் வன்னிப் பிராந்தியத்தின் ஒவ்வொரு இடத்துக்கும் சென்று நேரடியாகப் பார்த்து தெரிவு செய்யுங்கள். அப்போதுதான் அந்த மக்கள் அனுபவிக்கின்ற வலி உங்களுக்குத் தெரியும்.

எமக்கு இந்தத் திட்டங்களைச் செயல்படுத்தி முடிப்பது சவாலானதுதான். எங்களால் முடியும் என நினைத்துக் கொண்டு இதைச் செய்யுங்கள். இரவு, பகல் பாராமல் இதைச் செய்யவேண்டும். நாங்கள் முன்மாதிரியானவர்கள் என்பதை செயலில் காட்டுங்கள்.

இந்தத் திட்டங்களுக்கான ஒப்பந்தங்கள் வழங்கப்படும் போது ஊழல், இலஞ்சம் என்பன இருக்கக் கூடாது. எல்லாம் வெளிப்படைத்தன் மையாக நடைபெறவேண்டும். இந்த அரசாங்கத்தின் கொள் கையும் அதுதான், என்றார் ஆளுநர்.

இதன் பின்னர் கருத்துத் தெரிவித்த வடக்கு மாகாண பிரதம செயலாளர் இ.இளங்கோவன், அதிகாரிகளின் அர்ப்பணிப்பில் தான் இவற்றின் வெற்றி தங்கியிருக்கின்றது. எமது மாகாணத்துக்கு உட்பட்ட அனைத்துத் திணைக்களங்களும் ஒன்றிணைந்து செயல்படுத்தி முடிக்கவேண்டும் - என்றார். (ஐ-02)



# அறநெறி பாடசாலைக்கு அடிக்கல் நாட்டப்பட்டது!

வடமராட்சி, பெப். 19

வவுனியா பிரமணாலங்குளம் சிறீ முத்துமாரி அம்மன் அறநெறிப் பாடசாலைக்கான புதிய கட்டடத்துக்கு அடிக்கல் நாட்டப்பட்டது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்த இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் சாதனைத் தமிழன் மோகனதாஸ் சுவாமிகள் அடிக்கல்லை நாட்டி வைத்தார்.

அறநெறி பாடசாலை ஆசிரியர் திருமதி சுகுணா முகுந்தன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் வெங்கல செட்டிகுளம் பிரதேச செயலக உத்தியோகத்தர் சுஜேந்திரன், கிராம அலுவலர்களான கு. தவராசா, நி. ஷோபனா, வடகாடு சனசமூக நிலைய தலைவர் க.சின்னையா, முத்துமாரி அம்மன் ஆலய நிர்வாகிகள், மாதர் சங்க நிர்வாகிகள், மாணவர்கள் எனப் பலர் பங்கேற்றனர்.

இந்த அறநெறி பாடசாலைக்கான கட்டடம் அமைப்பதற்கு சந்நிதியான் ஆச்சிரமம் 20 இலட்சம் ரூபாயை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ- 02)

# மெய்வன்மை போட்டி!

யாழ்ப்பாணம், பெப். 19

மானிப்பாய் இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மை போட்டி நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கல்லூரி மைதானத்தில் அதிபர் து. திலீப்குமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வட மாகாண கட்டடங்கள் திணைக்கள பிரதம பொறியியலாளர் க. கணேசமூர்த்தி, சிறப்பு விருந்தினராக ராஜினி கருணாகரன் (பழைய மாணவர் சங்கம் - கனடா), கௌரவ விருந்தினராக வடமாகாண கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஐ)

# முகாமையாளரில்லாத டிப்போ; பயணிகள் பெரும் சிரமம்!

வடமராட்சி, பெப். 19

இலங்கை போக்குவரத்து சபையின் பருத்தித்துறை சாலை (டிப்போ) கடந்த 3 ஆண்டுகளாக முகாமையாளர் இன்றி இயங்கி வருகிறது. இதனால், பேருந்து சேவைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. பயணிகளும் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகி வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேநேரம், 3 வருடங்களுக்கு முன்னர் வட பிராந்தியத்தில் அதிக வருமானத்தை பருத்தித்துறை டிப்போ பெற்று வந்துள்ளது. ஆனால், தற்போது வருமானமும் குறைந்துள்ளதாகவும் கூறப்பட்டது.

முன்னர் பணியாற்றிய முகாமையாளர் இடம் மாற்றப் பட்டமையை தொடர்ந்து புதியவர் ஒருவர் நியமிக்கப்பட்டார். ஆனால், அவரும் சில மாதங்களே பணியில் இருந்தார். அவரும் இடம் மாற்றப்பட்ட நிலையில் இ. போ. ச. பருத்தித்துறை சாலை முகாமையாளர் இன்றியே இயங்கி வருகின்றது.

இந்த விடயத்தை நிவர்த்தி செய்வதற்கு இ. போ. ச. வட பிராந்திய சபை எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இதேநேரம், பயணிகள் தமது தேவைகளுக்காக பருத்தித்துறை சாலையை தொடர்பு கொள்ள தொலைபேசி வசதிகளும் இல்லை என்றும் முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டுள்ளன. (ஐ-02)

# சைவப் புலவர் சங்க நிர்வாக சபை கூட்டம்

யாழ்ப்பாணம், பெப். 19

அகில இலங்கை சைவப் புலவர் சங்கத்தின் நிர்வாக சபைக் கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு சங்கத்தின் தலைவர் சைவப்புலவர் சி. கா. கமலநாதன் தலைமையில் யாழ். வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிர்வாக சபைக் கூட்டத்தில் 2025ஆம் ஆண்டுக்கான சைவப்புலவர், இளம் சைவப்புலவர் பரீட்சை செயல்பாடுகள், சிவதீட்சை வழங்கல் தொடர்பான விடயம், பரீட்சைக்கான நேரடி வகுப்புக்களை நடத்துதல். கணக்கறிக்கை சம்பந்தமான விடயங்கள் கலந்துரையாடப்படவுள்ளதால் அனைத்து உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு சங்கத்தின் செயலாளர் சைவப் புலவர் செ. த. குமரன் அறிவித்துள்ளார். (ஐ)

# வெளிநாட்டு உணவகங்களின் வருகை பாரம்பரிய உணவுகளை ஓரங்கட்டிவிடும்!

## சிறுதானிய பொங்கல் விழாவில் ஐங்கரநேசன்

யாழ்ப்பாணம், பெப். 19

ஒர் இனத்தின் தேசிய அடையாளங்களில் உணவுப் பண்பாடும் ஒன்று. தேசியத்தைக் கட்டமைப்பதில் பண்பாட்டின் ஏனைய கூறுகளைப்போன்று உணவுப் பண்பாடும் காத்திரமான பங்களிப்பைச் செய்கிறது. ஆனால், மதப் பண்பாட்டில் பௌத்தத்தின் ஆக்கிரமிப்புக்கு எதிராகக் கிளர்ந்தெழுகின்ற நாம், உணவுப் பண்பாட்டில் நிகழும் ஆக்கிரமிப்புகள் குறித்துக் கண்டுகொள்ளாமல் இருக்கிறோம். அண்மைக்காலமாக வெளிநாட்டு உணவகங்கள் பல இங்கு கிளைகளைத் திறந்து கொண்டிருக்கின்றன. எமது உணவுப் பண்பாட்டில் திணிக்கப்படும் மாற்றங்கள் பற்றி நாம் விழிப்படையாவிட்டால் வெளிநாட்டு உணவகங்கள் எமது பாரம்பரிய உணவுகளை மேலும் ஓரங்கட்டிவிடும். எமது ஆரோக்கியமும் மேலும் வீழ்ச்சியடையும் - இவ்வாறு தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் சிறுதானியப் பொங்கல் விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை ஊரெழு வளர்பிறை சனசமூக நிலைய முன்றலில் நடைபெற்றது. இவ்விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், நெல் அரிசிச் சோற்றின் வருகையுடனேயே எமது உணவுத் தட்டுகளில் இருந்து சாமை, வரகு, கம்பு, குரக்கன், குதிரைவாலி போன்ற சிறுதானியங்கள் ஓரங்கட்டப்பட்டன. நெல் அரிசியுடன் ஒப்பிடும்போது சிறுதானியங்கள் அதிக கலோரிப் பெறுமானம் கொண்டவை. அதிக நார்ச்சத்து உடையவை. அதிக அளவில் மாப்பொருளையும் புரதத்தையும் விற்றமின்களையும் கனியுப்புகளையும் கொண்டவை.



மேலதிகமாக, புற்றுநோய் எதிர்ப்புச் சேர்வைகளையும் கொண்டிருக்கின்றன. இவற்றால் தான் எமது முன்னோர்கள் தேக ஆரோக்கியத்துடன் நூற்றாண்டைக் கடந்தும் வாழ்ந்தார்கள்.

சூழலியல் நோக்கிலும் நெல்லைவிட சிறுதானியங்களே முதன்மை பெறுகின்றன. நெல் பயிரிடுவதற்கு ஈரமான தரையும் அதிகளவில் நீர்ப்பாசனமும் தேவைப்படுகிறது. ஆனால், சிறுதானியங்கள் வறண்ட சூழலிலும் குறைந்த நீர்த்தேவையுடன் வளரக்கூடியவை. நெல் நோய்களினதும் பீடைகளினதும் தாக்கத்துக்கும் அதிகளவில் ஆளாகும் போது சிறுதானியங்கள் இவற்றுக்கு எதிராகத் தாக்குப் பிடிக்கின்றன. காலநிலை மாற்றம் எம்மை அச்சுறுத்திக் கொண்டிருக்கும் நிலையில் சிறுதானியங்களை நோக்கி நாம் திரும்புவது காலத்தின் கட்டாயமாக உள்ளது.

எமது இளைய தலைமுறை பாரம்பரிய உணவுகளை நாகரிகமற்றதொன்றாகக் கருதும் மனப்பாங்கைக் கொண்டிருக்கின்றது. துரித உணவகங்களையே அதிகம் நாடுகிறார்கள். கொத்து ரொட்டியையும், பீட்ஸாவையும், ப்ரைட் றைஸையுமே விரும்புகிறார்கள். மென்பான நிறுவனங்களின் விளம்பரங்களில் மயங்கி இந்த உணவுகளோடு சேர்த்து ஆபத்தான மென்பானங்களையும் அருந்தி வருகிறார்கள். தேசியம் என்பது வெறும் அரசியல் சொல்லாகியுள்ள இன்றைய சூழ்நிலையில் உணவுப் பண்பாட்டுத் தேசியம் பற்றிய புரிதலை எமது மக்களிடம் ஏற்படுத்துவது அவசியம் - என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
19.02.2025 புதன்கிழமை
பிலவ வருடம், மாசி 07

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## வடபுல கடற்றொழில் சம்மேளனத்தின் கருத்து

இந்திய மீனவர்களின் அத்துமீறிய இழுவை படகுகளால் எங்களுடைய தொழில் பாதிக்கப்படுகின்றது - அதற்காக இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி இந்தியாவின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் செயல்படுவதற்கு நாம் அனுமதிக்கப் போவதில்லை - இவ்வாறு யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கிராமிய அமைப்புகளின் தலைவர் தெரிவித்திருக்கின்றார்.

சீனத் தூதரக அதிகாரிகள் எங்களுக்கு உதவி செய்திருக்கின்றனர் - யார் உதவி செய்தாலும் நாங்கள் அதைப் பெற்றுக் கொள்வோம். அதற்காக, சீனா எங்களைப் பயன்படுத்தி கடற்பிராந்தியத்தில் இந்தியாவுக்கு நெருக்கடி கொடுப்பதை நாங்கள் அனுமதிக்கப் போவதில்லை என்றும் அவர் குறிப்பிட்டிருக்கின்றார். கடற்றொழிலாளர்கள் இந்தளவுக்குத் தெளிவாக இருந்தால் அது வரவேற்கத்தக்க விடயம்தான். ஆனால், இவ்வாறான விடயங்களில் எவரையும் எவரும் நேரடியாகப் பயன்படுத்துவதில்லை.

வடபுல மீனவர்களின் பிரச்னை நெடுநாள் விவகாரம். எனினும், இதற்கான நிரந்தரமான தீர்வைக் காணும் முயற்சிகள் இதுவரையில் வெற்றியளிக்கவில்லை. இந்திய மத்திய அரசாங்கம், மனிதாபிமான அணுகுமுறையை கடைப்பிடிக்குமாறு வலியுறுத்தி வருகின்றது. ஆனால், இந்திய மீனவர்களால் வடபுல மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகின்றது. அதுவும் ஒரு மனிதாபிமான பிரச்னைதான். ஆனால், இங்கு பிரச்னை இந்திய மத்திய அரசாங்கம் அல்ல. மத்தியில் எவர் ஆட்சியில் இருந்தாலும், அவர்கள் எவ்வாறான முயற்சிகளை மேற்கொண்டாலும் கூட, பிரச்னையை தீர்ப்பதற்கான சாவி தமிழ்நாட்டில்தான் இருக்கின்றது.

அத்துமீறிய இந்திய மீனவர்கள் இலங்கை கடற்படையால் கைது செய்யப்படும்போது, தமிழ் நாட்டு அரசியல்வாதிகள் எதிர்ப்புகளை வெளியிடுகின்றனர். தமிழ்நாட்டு முதலமைச்சர் இந்திய பிரதமருக்கு கடிதம் எழுதுகின்றார் - வெளிவிவகார அமைச்சுக்கு அழுத்தங்களை கொடுக்கின்றார். ஆனால், தமிழ்நாட்டைச் சேர்ந்த பெரு மீன்பிடி முதலாளிகளை கட்டுப்படுத்துவதற்கு தமிழ்நாட்டு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் எந்தவோர் ஆக்கபூர்வமான நடவடிக்கையையும் இதுவரையில் எடுக்கவில்லை. இவ்வாறான முதலாளிகள் பலர் ஆளும் திராவிட முன்னேற்றக் கழகத்தை சேர்ந்தவர்கள். தமிழ்நாட்டு முதலமைச்சரின் அரசியல் சகாக்கள்.

இந்த நிலையில்தான் அத்துமீறும் மீனவர்கள் பிரச்னைக்கு இந்திய மத்திய அரசால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதனையும் முன்னெடுக்க முடியவில்லை. இந்த விடயம் தொடர்பில் ஸ்டாலினுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் ஈழத் தமிழ் அரசியல்வாதிகளும் இதுவரையில் உருப்படியாக எதனையும் செய்யவில்லை. ஸ்டாலினோடு தங்களுக்குத் தொடர்பிருப்பதாகக் காட்டிக்கொள்வதில் கரிசனைய காண்பிக்கும் நமது தமிழ் அரசியல்வாதிகளோ, இந்த விடயத்தில் தமிழ்நாட்டு அரசியல்வாதிகள் காண்பிக்க வேண்டிய மனிதநேய அணுகுமுறையை ஒருபோதும் வலியுறுத்தியதில்லை. எனவே, வடபுல மீனவர்கள் இந்திய தூதரகத்துக்கு முன்னால் போராட்டம் நடத்துவதை விடவும் தமிழ்நாடு - குறிப்பாக, தற்போதுள்ள முதலமைச்சர் ஸ்டாலினை முன்னிலைப்படுத்தியே தங்களின் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும். தமிழ்நாட்டில் ஈழ ஆதரவாளர்களாகத் தங்களை காண்பித்துக் கொள்வோரின் நிலைப்பாடு என்னவென்று வடபுல மீனவர்கள் கோர வேண்டும்.

இந்தப் பிரச்னை தீர்வின்றி தொடர்கின்ற நிலையில்தான், கிடைத்த வரைக்கும் இலாபம் என்னும் அடிப்படையில் சீனா இந்த விடயத்துக்குள் நுழைய முற்படுகின்றது. இலங்கைக்கு கிடைக்கும் ஒவ்வொரு வாய்ப்புகளையும் தனது நீண்டகால நலன்களுக்கான மூலதனமாக்கிக் கொள்ள வேண்டுமென்று திட்டங்களை தீட்டும் சீனா வடபுல மீனவர்களை நோக்கி திரும்பியிருப்பது ஆச்சரியமானதல்ல.

# 30 வருட வரலாற்றில் இதுவே அதிகபட்ச சம்பள உயர்வு!

### பிரதி அமைச்சர் பெருமிதம்

கொழும்பு, பெப். 19

ஜனாதிபதி அநுர திஸாநாயக்க பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த வரவு - செலவுத் திட்டம், முப்பது ஆண்டுகளில் சமர்ப்பிக்கப்பட்ட மிகவும் நேர்மறையான வரவு - செலவுத் திட்டம் என தொழிலாளர் பிரதி அமைச்சர் மகிந்த ஜெயசிங்க தெரிவித்துள்ளார்.

சிலர் வரவு செலவுத் திட்டத்தினை பாசாங்குத்தனமாக விமர்சிப்பதாகக் கூறிய அவர், பொருளாதார ஆய்வாளர்கள் வரவு - செலவுத் திட்டம் குறித்து நேர்மறையான கருத்துக்களைத் தெரிவித்து வருவதாகவும் கூறினார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வரவு-செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த வரவு - செலவுத் திட்டம் சந்தேகத்திற்கு இடமின்றி நாட்டுக்கு ஒரு வரலாற்று வரவு - செலவுத் திட்டமாக மாறும்.

இன்றைய இந்தச் சூழ்நிலையால் எதிர்க்கட்சிகள் ஆட்டிப்படைக்கின்றன. நமது வெற்றிகரமான வரவு - செலவுத் திட்டத்தை நிலைத்தன்மையற்றதாக இருப்பதற்குக் காரணம் பாசாங்குத்தனமே தவிர வேறில்லை.

சமீபத்திய வரலாற்றில் மிக உயர்ந்த சம்பள உயர்வு அரசு ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. ஒன்பது ஆண்டுகளில் அரசு ஊழியர்களின் அடிப்படைச் சம்பளம் அதிகரிக்கப்படவில்லை.

கிராம சேவகர்கள் மற்றும் வைத்தியர்களின் சம்பளம் எவ்வாறு நிர்ணயிக்கப்படுகிறது என்பதை விளக்கிய பிரதி அமைச்சர், ஏப்ரல் முதலாம் திகதி முதல் மொத்த சம்பள உயர்விலிருந்து 7,500 ரூபாவும், மீதமுள்ள தொகையில் 30 வீத தொகையும் அனைத்து அரச ஊழியர்களின் அடிப்படைச் சம்பளத்தில் சேர்க்கப்படும் - என்றார். (அ)

# லஞ்சம் வாங்கிய பொலிஸ் உத்தியோகத்தரின் வழக்கு கொழும்பு மேல்நீதிமன்றுக்கு மாற்றம்!

கொழும்பு, பெப். 19

லஞ்சம் வாங்கிய குற்றச்சாட்டில் யாழ்ப்பாணத்தில் வைத்துக் கைதுசெய்யப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்மீதான வழக்கு கொழும்பு மேல் நீதிமன்றுக்கு பாரப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் விசேட குற்றத்தடுப்பு பிரிவை சேர்ந்த பொலிஸ் உத்தி யோகத்தர் ஒருவர் கடந்த 2023ஆம் ஆண்டு ஜனவரி 30ஆம் திகதி 10 இலட்சம் ரூபாயை லஞ்சமாக பெற முயன்றார். அந்தச் சமயம் லஞ்ச, ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு அதிகாரிகளால் அவரின் வீட்டில் வைத்து நேரடியாகக் கைது செய்யப்பட்டார்.

இதுதொடர்பான வழக்கு விசாரணை கொழும்பு புதுக்கடை 1ஆம் இலக்க நீதிவான் நீதிமன்றில் நடைபெற்று வந்தது.

இந்த நிலையில், இந்த வழக்கு தொடர்பில் கொழும்பு மேல் நீதிமன்றில் லஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு குற்றப் பகிர்வுப் பத்திரம் தாக்கல் செய்தமையால் இந்த வழக்கை முடிவுறுத்துமாறு புதுக்கடை நீதிவான் நீதிமன்றிடம் கோரப்பட்டது.

இதையடுத்து, நேற்று செவ்வாய்க்கிழமை இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டு, லஞ்ச, ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவின் கோரிக்கைக்கு அமைவாக கொழும்பு மேல் நீதிமன்றுக்கு வழக்கு பாரப்படுத்தப்பட்டது. (ஐ)

# நுளம்பு பெருகும் சூழல்; ரூ.50ஆயிரம் அபராதம்

யாழ்ப்பாணம், பெப். 19

நுளம்பு பெருகும் விதமான சூழலை வைத்திருந்த இரும்பு சேகரிப்பு நிலையத்தின் உரிமையாளருக்கு 50 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது. அத்துடன், அவர் கடும் எச்சரிக்கையுடன் யாழ். மேலதிக நீதிவான் நீதிமன்றால் விடுவிக்கப்பட்டார்.

கோப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் நீர்வேலி பகுதியிலுள்ள இரும்பு சேகரிப்பு நிலையம் ஒன்றின் உரிமையாளருக்கே இவ்வாறு அபராதம் விதிக்கப்பட்டது.


கடந்த ஆண்டு ஒகஸ்ட் மாதம் குறித்த இரும்பு சேகரிப்பு நிலையத்தில் அந்தப் பகுதியின் பொதுச் சுகாதார பரிசோதகர் எஸ். உதயபாலா தலைமையிலான குழுவினர் சோதனை நடத்தினர். இதன்போது நுளம்பு பெருகும் சூழல் இருப்பதை அவதானித்த குழுவினர் அதனை தூய்மைப்படுத்த கால அவகாசம் வழங்கியிருந்தனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மீளவும் இரும்பு சேகரிப்பு நிலையத்துக்கு சென்ற சுகாதார பரிசோதகர் தலைமையிலான குழுவினர் நுளம்பு பெருகும் சூழலே தற்போதும் இருப்பதை அவதானித்தனர்.

இதையடுத்து அந்த இரும்பு சேகரிப்பு நிலையத்தின் உரிமையாளருக்கு எதிராக அன்றைய தினமே யாழ். மேலதிக நீதிவான் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டது.


அன்றைய தினமே விசாரணைக்கு எடுக்கப்பட்ட இந்த வழக்கில் இரும்பு சேகரிப்பு நிலையத்தின் உரிமையாளருக்கு 50 ஆயிரம் ரூபாயை அபராதமாக விதித்தார் நீதிவான் எஸ். லெனின்குமார். அத்துடன், இரும்பு சேகரிப்பு நிலையத்தை சுத்தமாக வைத்திருக்குமாறும் கடும் எச்சரிக்கை விடுத்து அவரை விடுவித்தார். (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெப்ரவரி -19 புதன்கிழமை
குரோதி வருடம் - மாசி 07
நல்ல நேரம்:9.00-10.30
ராகு காலம்:12.00 -1.30
திதி :சப்தமி



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
கடினமான வேலைகளையும் எளிதாக முடிப்பீர்கள். சகோதர வகையில் பயனடைவீர்கள். கல்யாண பேச்சு வார்த்தை வெற்றியடையும். மனைவி வழியில் ஆதரவு பெருகும். சாதிக்கும் நாள்.

**இடபம்**
உறவினர். நண்பர்கள் மத்தியில் அந்தஸ்து உயரும். அரசால் அனுகூலம் உண்டு. வழக்கில் நல்லதீர்ப்பு வரும். வியாபாரத்தில் பழைய சரக்குகள் விற்கும். பணவரவு திருப்திதரும்.

**மிதுனம்**
புதிய சிந்தனைகள் மனதில்தோன்றும். நீண்ட நாள் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். பிள்ளைகளின் வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். நினைத்ததை முடிக்கும் நாள்.

**கடகம்**
பால்ய நண்பர்கள் உதவுவார்கள். தாயாருடன் வீண் விவாதம் வந்து போகும். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். புதுவேலை கிடைக்கும். உழைப்பால் உயரும் நாள்.

**சிம்மம்**
உங்கள் பேச்சில் அனுபவஅறிவு வெளிப்படும். உடன்பிறந்தவர்கள் உறுதுணையாக இருப்பார்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். சொத்துபிரச்னை ஒன்று தீரும்.

**கன்னி**
கடந்த இரண்டு நாட்களாக இருந்த அலைச்சல் டென்ஷன்யாவும் நீங்கும். குடும்பத்தில் நிம்மதி உண்டு. வியாபாரத்தில் ஏற்பட்ட இழப்புகளை சரி செய்வீர்கள். திடீர் திருப்பங்கள் நிறைந்த நாள்.

**துலாம்**
ராசிக்குள்சந்திரன்இருப்பதால்உணர்ச்சிவசப்பட்டு அவசர முடிவுகள் எடுக்க வேண்டாம். யாரையும் எளிதில் நம்பி ஏமாற வேண்டாம். கடனாக கொடுத்த பணத்தை வசூலிப்பீர்கள்.

**விருச்சிகம்**
திட்டமிட்ட காரியங்களை அலைந்து திரிந்து முடிக்க வேண்டி வரும். பிள்ளைகள் பிடிவாதமாக இருப்பார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களிடம் விவாதம் வேண்டாம். நிதானம் தேவைப்படும் நாள்.

**தனுசு**
எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். பழைய கடன் பிரச்னை கட்டுக்குள் வரும். மதிப்புக் கூடும் நாள்.

**மகரம்**
சொன்ன சொல்லை காப்பாற்றுவீர்கள். பிள்ளைகளின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். சிலரின் உதவியை நாடுவீர்கள். வியாபாரத்தில் சந்தை ரகசியங்களை தெரிந்துகொள்வீர்கள்.

**கும்பம்**
கணவன்-மனைவிக்குள் இருந்த பிணக்குகள் நீங்கும். பழைய பிரச்னைகளுக்கு மாறுபட்ட அணுகுமுறையால் தீர்வு காண்பீர்கள். உடல் நலம் சீராகும். தொழில் லாபம் அதிகரிக்கும்.

**மீனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சில விமர்சனங்களுக்கும் கேலிப் பேச்சிற்கும் ஆளாவீர்கள். குடும்பத்தில் சிறு வார்த்தைகள் கூட பெரிய தகராறில் போய் முடியும். விட்டுக் கொடுக்க வேண்டிய நாள்.

# யாழில் வேட்பாளர்களை அறிவுறுத்த பயிற்றுவிப்பாளர்களுக்குப் பயிற்சி



யாழ்ப்பாணம், பெப்.19
2023 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க தேர்தல் செலவினத்தை ஒழுங்குபடுத்துதல் சட்டம் சம்பந்தமாக உள்ளூராட்சி சபை தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களை அறிவுறுத்துவதற்காக பிரதேச மட்டத்தில் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துவதற்குத் தேவையான பயிற்றுவிப்பாளர்களைப் பயிற்றுவிக்கும் (ரி.ஓ. ரி.) நிகழ்ச்சித் திட்டம் யாழ்ப்பாணம் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) க. சிறீமோகனன் தலைமையில் நேற்று முன்தினம் காலை மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதன்போது, பயிற்றுவிப்பாளர்களைப் பயிற்றுவிப்பது தொடர்பான தெளிவூட்டல்களை தேர்தல்கள் உதவி ஆணையாளர் இ. கி. அமல்ராஜ் முன்வைத்தார்.

இதில், தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் சிறீ ரத்நாயக்க, மேலதிக தேர்தல் ஆணையாளர் (நீதி) சிந்தக குலரத்ன, மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் (நிர்வாகம்) எஸ். அச்சுதன், யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்ட செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். (எ)

# காங்கேசன்துறை - நாகை இடையிலான கப்பல் போக்குவரத்து மீண்டும் ஆரம்பம்

யாழ்ப்பாணம், பெப்.19
காங்கேசன்துறை - நாகப்பட்டினம் இடையிலான பயணிகள் போக்குவரத்து கப்பல் சேவை எதிர்வரும் 22 ஆம் திகதி மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளதாக சிவகங்கை கப்பல் சேவை நிறுவனத்தின் தலைவர் சுந்தரராஜ் பொன்னுச்சாமி தெரிவித்தார்.

22 ஆம் திகதி காலை 07. 30 மணியளவில் நாகப்பட்டினத்தில் இருந்து பயணத்தை ஆரம்பிக்கும் கப்பலானது காங்கேசன்துறையை வந்தடைந்த பின்னர் மீண்டும் பிற்பகல் 01. 30 மணியளவில் காங்கேசன்துறையில் இருந்து பயணத்தை ஆரம்பித்து நாகப்பட்டினத்தை சென்றடையும்.

www.sailsubham.com என்ற இணையத்தளத்துக்குள் பிரவேசித்து பயணச்சீட்டுக்களை பதிவு செய்ய முடியும். இந்தக் கப்பல் சேவையானது செவ்வாய்க்கிழமை தவிர்த்து வாரத்துக்கு 6 நாட்கள் நடைபெறும் என அந்த நிறுவனம் மேலும் அறிவித்துள்ளது. (எ-05)

# பாடசாலைக்குள் மதுபோதையில் நுழைந்த பொலிஸ் உத்தியோகத்தர்!

## மாணவிகளுடன் தகாத முறையில் நடக்க முயற்சி

முல்லைத்தீவு, பெப்.19
முல்லைத்தீவு - மல்லாவி பொலிஸ் நிலைய பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் யோகபுரம் பாடசாலைக்குள் மதுபோதையில் சிவில் உடையில் நுழைந்து மாணவிகளை மலசல கூடத்துக்கு வருமாறு அழைத்து துஷ்பிரயோகத்தில் ஈடுபட முற்பட்ட போது வசமாக சிக்கியுள்ளார்.

பாடசாலை விளையாட்டுப் போட்டிக்கான ஏற்பாடுகள் நடைபெற்று வரும் நிலையில் நேற்று முன்தினம் மாலை மூன்று மாணவிகளுடன் இவ்வாறு தகாத முறையில் நடக்க முற்பட்டார்.

இதன் போது, மாணவிகள் குறித்த விடயத்தை வெளியே கூறியதன் பின்னர் அங்கிருந்தவர்கள் பொலிஸ் உத்தியோகத்தருடன் முரண்பட்டனர்.

இந்தச் சம்பவம் குறித்து மல்லாவி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது. குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் மதுபோதையில் இருந்தார் என்பதனை உறுதிப்படுத்துவதற்கு மருத்துவ பரிசோதனை செய்யப்பட வேண்டும் என்றும், பொலிஸ் தரப்பு குறித்த பொலிஸ் உத்தியோகத்தரை தப்பிக்க வைக்கும் செயல்பாடுகளில் ஈடுபடக்கூடாது என்றும் பெற்றோர் வலியுறுத்தியுள்ளனர். (எ-05)

# பணம் பறித்த இருவர் விளக்கமறியலில்!

யாழ்ப்பாணம், பெப்.19
வீதியில் சென்ற நபரிடம் 25 ஆயிரம் ரூபாய் பணம் மற்றும் மதுபானப் போத்தல்களை பறித்த இருவர் வட்டுக்கோட்டை பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் நபர் ஒருவர் மதுபானப் போத்தல்கள் மற்றும் 25 ஆயிரம் ரூபாய் பணத்துடன் மூளாய் வீதியால் பயணித்துள்ளார்.

இதன்போது, வீதியால் வந்த இருவர் அவரது மதுபா னப் போத்தல்கள் மற்றும் பணத்தை பறித்து சென்றனர்.

இந்தச் சம்பவம் குறித்து வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

இந்த நிலையில் மூளாய் பகுதியைச் சேர்ந்த இருவர் பொலிஸாரால் கடந்த 16 ஆம் திகதி கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட இருவரையும் மல்லாகம் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் முற்படுத்தியவேளை அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (எ-05)

# சிறுமி குளிப்பதை வீடியோ எடுத்தவர் கைது

வவுனியா, பெப்.19
வவுனியாவில் 15 வயது சிறுமி ஒருவர் குளிப்பதை வீடியோ எடுத்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

தோணிக்கல் பகுதியில் ஆலயம் ஒன்றின் கட்டுமாணப் பணி இடம்பெற்று வரும் நிலையில், குறித்த ஆலயத்தில் மரவேலைகளில் ஈடுபட்ட இளம் குடும்பஸ்தர் ஒருவர் அயல் வீட்டில் உள்ள மாணவி தனது வீட்டில் குளித்து கொண்டிருக்கும் போது வேலியால் வீடியோ எடுத்ததாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இதனையடுத்து குறித்த நபர் கைது செய்யப்பட்டதுடன், அவரது தொலைபேசி இரசாயன பகுப்பாய்வுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும், மேலதிக விசாரணைகளின் பின்னர் குறித்த நபரை நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (எ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசுக்கு எதிரான நிலைப்பாட்டை கொண்டுள்ளோருக்கு அச்சுறுத்தல்!

## நாமல் ராஜபக்ஷ குற்றச்சாட்டு

கொழும்பு, பெப். 19

**அரசாங்கத்துக்கு எதிரான நிலைப்பாட்டை கொண்டுள்ளவர்கள் அரசாங்கத்துக்கு சார்பானவர்களால் அச்சுறுத்தலுக்குள்ளாக்கப்படுகிறார்கள். இவ்வாறான செயற்பாடு அரசாங்கத்துக்கு அழகல்ல, தேர்தலைப் பிற்போடும் பாவச்செயலுக்கு மக்கள் விடுதலை முன்னணியும் கடந்த காலங்களில் ஒத்துழைப்பு வழங்கியுள்ளது. உள்ளூராட்சிமன்றத் தேர்தலை விரைவாக நடத்தவேண்டும் என்ற நிலைப்பாட்டில் நாங்களும் உள்ளோம். இருப்பினும் தேர்தல் நடவடிக்கைகள் சாதாரண தர பரீட்சைக்கு இடையூறாக அமைய கூடாது என பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.**



அவர் மேலும் தெரிவிக்கையில்-தேர்தலை விரைவாக நடத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டில் என்றும் உறுதியாக உள்ளோம். நல்லாட்சி அரசாங்கம் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை பிற்போடுவதற்கு நடவடிக்கை எடுத்தபோது மக்கள் விடுதலை முன்னணியினர் முழுமையாக ஒத்துழைப்பு வழங்கினார்கள். அதனை ஆளும் தரப்பினர் அறியமாட்டார்கள். ஆகவே தேர்தலை பிற்போடும் பாவச் செயலுக்கு மக்கள் விடுதலை முன்னணியும் ஒத்துழைப்பு வழங்கியுள்ளது.

இந்த பாவச் செயலில் நாங்களும் எமது கட்சியும் ஒருபோதும் ஆதரவளிக்கவில்லை.

சுதந்திரமானதும், நீதியானதுமான முறையில் தேர்தலை நடத்த வேண்டும். தேர்தலை பிற்போடாமல் நடத்த வேண்டும் என்பதை அரசாங்கத்திடம் வலியுறுத்துகிறோம்.

இருப்பி னும் எதிர்வரும் மாதம் 4 முதல் 5 லட்சம் வரையிலான மாண வர்கள் சாதாரண தரப் பரீட் சைக்கு தோற்றுகிறார்கள். 80 ஆயிரம் பேர் தேர்தலில் போட்டியிடுவார்கள். ஆகவே பரீட் சைக்கு மத்தியில் தேர்தல் செயற்பாடுகளை முன்னெ டுப்பது பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு ஏதாவதொரு வழியில் பாதிப்பை ஏற்படுத்தும்.

ஆகவே பரீட்சை குறித்து அரசாங்கம் விசேட கவனம் செலுத்த வேண்டும்.

அரசாங்கம் ஊடகங்களையும், ஊடகவியலாளர்களையும் அச்சுறுத்துகிறது.

சமூக வலைத் தள செயற்பாட்டாளர்கள் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

அரசாங்கத்தின் செயற்பாட்டை விமர்சித்து முகப்பு புத்தகத்தில் கருத்து பதிவேற்றம் செய்த மாத்தளை பகுதியை சேர்ந்த நபர் அரசாங்கத்தின் கட்டளை பிறப்பிக்கும் நபரால் அச்சுறுத்தலுக்குட் படுத்தப்பட்டுள்ளார். சமூக வலைத்தளங்களில் அந்த காணொளி பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

அரசாங் கத்தின் சார்பில் கட்டளை பிறப்பிக்கும் நபர்கள் வீடுக ளுக்கு செல்கிறார்கள்.

அரசாங்கத்துக்கு எதிரான நிலைப்பாட்டை கொண்டுள்ளவர்கள் அரசாங்கத்துக்கு சார்பானவர்களால் அச்சுறுத்தலுக் குள்ளாக்கப்படுகிறார்கள்-என்றார். (அ)

# ஹோமாகம வைத்தியசாலை சேவைகளில் பெரும் பாதிப்பு!

கொழும்பு, பெப். 19

வைத்தியசாலை அதிகாரிகள் தொடர்பில் எழுந்துள்ள பிரச்னை காரணமாக ஹோமாகம ஆதார வைத்தியசாலையின் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

இதன் காரணமாக, சிகிச்சைக்காக வந்த நோயாளிகள் பெரும் அசௌகரியத்தை அனுபவித்து வருகின்றனர்.

வைத்தியர்களும் , வைத்தியசாலை நிர்வாகமும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஒப்பந்தங்கள் எட்டப்பட்ட பிறகு சிகிச்சையை மீண்டும் ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இதன் காரணமாக நோயாளிகள் தற்போது நீண்ட வரிசையில் காத்திருக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. (அ)

# கோதுமை மா விலையை 25 ரூபாவால் குறைக்குக!

## வெதுப்பக உரிமையாளர்கள் கோரிக்கை

கொழும்பு, பெப். 19

ஒரு கிலோ கிராம் கோதுமை மாவின் விலையை 10 ரூபாவினால் குறைத்தது போதுமானதல்லவென வெதுப்பக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

வெதுப்பக உரிமையாளர்கள் சங்கத் தலைவர் என்.கே ஜயவர்த்தன இதனைத் தெரிவித்தார்.

நேற்று முதல் அமுலாகும் வகையில் பிறீமா மற்றும் செரண்டிப் ஆகிய மா ஆலை நிறுவனங்கள் ஒரு கிலோ கிராம் கோதுமை மாவின் விலையை 10 ரூபாவினால் குறைத்துள்ளன.

வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்கான அரசாங்கத்தின் திட்டத்திற்கு ஆதரவளிக்கும் வகையில் இந்த விலைக் குறைப்பு நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளதாக பிறீமா மற்றும் செரண்டிப் ஆகிய மா ஆலை நிறுவனங்கள் தெரிவித் துள்ளன.

கோதுமை மா கிலோவொன்று சந்தைகளில் தற்போது 175 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது.

10 ரூபா விலை குறைப்பு மூலம் வெதுப்பக உற்பத்தி பொருட்களின் விலைகளைக் குறைக்க முடியாது என வெதுப்பக உரிமையாளர்கள் சங்கத் தலைவர் என்.கே ஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

பாண் உள்ளிட்ட வெதுப்பக உற்பத்திகளின் விலைகளைக் குறைக்க வேண்டுமானால் கோதுமை மா கிலோவொன்றின் விலை 25 ரூபாவினால் குறைவடைய வேண்டும் என அவர் குறிப்பிட்டார். (அ)

# எந்தத் தரப்பினரையும் அநுர அரசு பட்ஜெட்டில் புறக்கணிக்கவில்லை

## சுனில் ஹந்துனெத்தி கூறுகிறார்

கொழும்பு, பெப். 19

மக்களுக்கு வழங்கிய அனைத்து வாக்குறுதிகளை சிறந்த முறையில் நிறைவேற்றுவோம். அதற்கான திட்டங்களையும் வரவு-செலவுத் திட்டத்தில் முன்வைத்துள்ளோம். பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் எந்த தரப்பினரையும் வரவு-செலவுத் திட்டத்தில் புறக்கணிக்கவில்லை என கைத்தொழில் அமைச்சர் சுனில் ஹந்துனெத்தி தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன் தினம் திங்கட்கிழமை நடைபெற்ற அமர்வில் 2025 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை ஜனாதிபதி முன்வைத்தார். வரவு-செலவுத் திட்டம் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப் பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-, மக்களின் உரிமைகள் மற்றும் நாட்டின் சுயாதீனத்தை உறுதிப்படுத்தும் வகையில் தான் 2025 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் பிற நாடுகளினதும், வெளிநாட்டு நிறுவனங்கள் அல்லது ஒருசில நிறுவனங்களின் தேவைகளுக்காகவே வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டது.

உற்பத்தியை அடிப்படையாகக் கொண்டு வரவு-செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. வரலாற்றில் முதன் முறையாக சிறைச்சாலைகள் மற்றும் சிறப்பு நிலையங்களில் உள்ள பிள்ளைகளின் நலன் கருதி பாரிய நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

அமைச்சுகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதியை முறையாக செயற்படுத்துவதற்கான வழிமுறைகளும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. வரி வருமானத்தை அதிகரிப்பதற்கும் விசேட திட்டங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. நாடு என்ற ரீதியில் முன்னேற்றடைவதற்காகவே இந்த வரவு-செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளன.

அரச நிறுவனங்களை தனியார்மயப்படுத்தும் வகையில் கடந்த காலங்களில் வரவு ,செலவுத் திட்டம் முன்வைக்கப்பட்டன. ஆனால் இம்முறை வரவு செலவுத் திட்டத்தில் அரச நிறுவனங்களை தனியார்மயப்படுத்தும் திட்டங்கள் முன்வைக்கப்படவில்லை. மாறாக சிறிலங்கன் எயார் லைன்ஸ் விமான சேவைகள் நிறுவனத்தை அபிவிருத்தி செய்வதற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

மக்களுக்கு வழங்கிய அனைத்து வாக்குறுதிகளை சிறந்த முறையில் நிறைவேற்றுவோம். அதற்கான திட்டங்களையும் வரவு செலவுத் திட்டத்தில் முன்வைத்துள்ளோம். பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் எந்த தரப்பினரையும் வரவு-செலவுத் திட்டத்தில் புறக்கணிக்கவில்லை-என்றார். (அ)

# தேர்தல் நடத்தப்படாமையே நாட்டின் ஆயுதப் போராட்டத்திற்குக் காரணம்

## அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர்

கொழும்பு, பெப். 19

தேர்தல் நடத்தப்படாமையே நாட்டின் ஆயுதப் போராட்டத்திற்குக் காரணமாக அமைந்தது எனக் கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், அடிமட்ட மக்களை பொறுத்தமட்டில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் என்பது மிகவும் முக்கியமானது எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதனிடையே, பல்வேறு காரணங்களை முன்வைத்து மக்களால் விரும்பப்படும் தேர்தலை பிற்போட நினைக்கும் எதிர்க்கட்சிகளின் நிலைப்பாட்டை வன்மையாகக் கண்டிப்பதாக பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவித்தார்.

பெருந்தோட்ட நிறுவனங்கள் மலையக மக்களுக்கான சேவைகளை வழங்குவதனை நிறுத்தியுள்ளதாகவும், அந்த மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்திசெய்யக் கூடிய நிறுவனமாக உள்ளூராட்சி மன்றங்கள் செயற்பட்டு வருவதாகவும் அவர் சுட்டிக் கட்டியுள்ளார். (அ)

# நிபந்தனையின்றி பேச்சு முன்னெடுக்கப்பட்டாலே ஐ.தே.க.-ஐக்கிய மக்கள் சக்தி இணைவு சாத்தியம்!

## சுட்டிக்காட்டுகிறார் ஆஷூ மாரசிங்க

கொழும்பு, பெப். 19

நிபந்தனைகள் இன்றி பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்படாவிட்டால் ஐக்கிய தேசிய கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி இணைவு சாத்தியமற்றதாகும். எனவே இந்த கட்சிகளுக்கிடையிலான பேச்சுவார்த்தைகள் இனியும் தொடரும் என்று நாம் நம்பவில்லை என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஆஷூ மாரசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,ஐக்கிய தேசிய கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணி சாத்தியமற்ற போக்கிலேயே சென்று கொண்டிருக்கிறது. இரு கட்சிகளின் தலைவர்களுக்கும் உண்மையான தேவைப்பாடு காணப்பட்டால் இருவரும் நேரடியாக இதில் தலையிட வேண்டும். ஆனால் இரு தரப்பிலுமே அவ்வாறானதொரு நிலைமையை அவதானிக்க முடியவில்லை. ரணில் மற்றும் சஜித் அணி களிலுள்ள மூன்று சகுனிகள் தான் இந்த வேலைத்திட்டத்தை எதிர்க்கின்றனர்.

ஜே.ஆர்.ஜயவர்தன காலத்தில் அவருடன் இவ்வாறானவர்கள் இருக்கவில்லை. அவர் சுயாதீனமாகவே முடிவுகளை எடுத்தார். ஆனால் தற்போதைய இரு தலைவர்களுமே அவ்வாறு சுயாதீனமாக செயற்படுவ தில்லை.

இணைந்து செயற்படாவிட்டால் இந்த இரு கட்சிகளுக்குமே எதிர்காலம் இல்லை. நாட்டு மக்களுக்காகவும், இளம் தலைமுறையினருக்காகவும் புதிய வேலைத்திட்டமொன்றையாவது நாம் ஆரம்பிப்போம். இந்த கட்சிகளுக்கிடையிலான பேச்சுவார்த்தைகள் இனியும் தொடரும் என்று நாம் நம்பவில்லை. நிபந்தனைகள் இன்றி பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்படாவிட்டால் இந்த இணைவு சாத்தியமற்றது என்று நான் ஆரம்பத்திலேயே குறிப்பிட்டிருக்கின்றேன்.

எனவே நிபந்தனைகளை ஒரு புறம் ஒதுக்கி வைத்து விட்டு எதிர்வரும் தேர்தல்களை இலக்காகக் கொண்டு இரு தரப்பும் செயற்படவேண்டும்-என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடகொரியாவாக இலங்கை மாறுவதை தடுக்கவேண்டும்

## பொதுஜன பெரமுன கோரிக்கை

கொழும்பு, பெப். 19

**ஜனநாயக உரிமைகளை ஒடுக்கும் செயற்பாடுகளை அரசாங்கம் ஆரம்பித்திருக்கிறது. இலங்கை, வடகொரியாவாக மாறுவதை தடுப்பதற்கு மக்கள் அனைவரும் குரல் கொடுக்க வேண்டும் என பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.**

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-நாட்டில் தற்போது ஜனநாயக உரிமைகளை ஒடுக்கும் செயற்பாடுகளை அரசாங்கம் ஆரம்பித்திருக்கிறது. இந்த அரசாங்கம் ஆட்சியைப் பொறுப்பேற்றவுடன் தமது தேர்தல் பிரசார மேடைகளில் ஏறிய ஒய்வு பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்களை பொலிஸ் மற்றும் அரச பாதுகாப்புப் பணிகளில் உயர் பதவிகளில் நியமித்தமையாகும்.

இதற்கு முன்னர் எந்தவொரு அரச தலைவரும் இவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுத்ததில்லை. தற்போது பொலிஸ் திணைக்களம் முழுமையாக அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளது.

மறுபுறம் சட்டமா அதிபர் மீது அச்சுறுத்தல் விடுக்கப்படுகிறது. அது மாத்திரமின்றி அரசியல் கட்சிகளுக்கும் அச்சுறுத்தல் விடுக்கப்படுகிறது.

இந்நாட்டை வடகொரியாவாக்குவதற்கு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க முயற்சிக்கின்றாரா என்ற சந்தேகம் எழுகிறது. எனவே அரசாங்கத்தின் இவ்வாறான ஜனநாயக விரோதச் செயற்பாடுகளுக்கு எதிராக மிகக் கடுமையாக எதிர்ப்புக்களை வெளியிட வேண்டும்.

கடந்த காலங்களில் சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்தி முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மீது பல் வேறு அவதூறுகள் பரப்பப்பட்டன.

ஆனால் அவர் ஒருபோதும் சமூக வலைத்தளங்களை முடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை. தற்போதைய அரசாங்கம் அவ்வாறு அல்ல.

தமக்கு எதிரான கருத்துக்களை வெளியிடுவதற்கு எவருக்கும் அனுமதிப்பதில்லை. எனவே இலங்கை, வடகொரியாவாக மாறுவதை தடுப்பதற்கு மக்கள் அனைவரும் குரல் கொடுக்கவேண்டும்-என்றார். (அ)



# நாமல் ராஜபக்ஷவுக்கு எதிராக குற்றப்பத்திரம்!

கொழும்பு, பெப். 19

பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவுக்கு, சர்ச்சைக்குரிய கிரிஷ் ஒப்பந்தம் தொடர்பான வழக்கில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

சட்டமா அதிபரினால் தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரிகை நேற்று கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி மஞ்சுள திலகரத்ன முன்னிலையில் கையளிக்கப்பட்டது. இதையடுத்து பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவை பிணையில் விடுவிக்க கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டது.

அதன்படி அவர், 100,000 ரூபா ரொக்கம் மற்றும் தலா 10 மில்லியன் ரூபா சரீரப் பிணையில் விடுக்கப்பட்டார்.

இலங்கையில் ரக்பி விளையாட்டின் அபிவிருத்திக்காக இந்தியாவைத் தளமாகக் கொண்ட கிரிஷ் நிறுவனத்திடமிருந்து 70 மில்லியன் ரூபாயை முறைகேடாகப் பயன்படுத்தியதாக நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

மீள் விசாரணையை எதிர்வரும் மார்ச் 27 ஆம் திகதிக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் ஒத்திவைத்தது. (அ)

# போலி வீஸாவை பயன்படுத்தி கனடாவுக்கு தப்பிச் செல்ல முயன்ற தம்பதியர் சிக்கினர்!

கொழும்பு, பெப். 19

போலி விசாவை பயன்படுத்தி கனடாவுக்கு தப்பிச் செல்ல முயன்ற தம்பதி ஒன்று கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து விமான நிலைய குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கள அதிகாரிகளால் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு கைது செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணம் பிரதேசத்தைச் சேர்ந்த 34 வயதுடைய மனைவியும் 40 வயதுடைய கணவனுமே கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்கள் இருவரும் ஜப்பானின் நரிட்டா நகரத்துக்குச் செல்வதற்காக நேற்று முன் தினம் இரவு 08.35 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்துக்குச் சென்றுள்ளனர்.

இதன்போது, சந்தேக நபர்கள் இருவரும் சோதனை நடவடிக்கைகளுக்காக தங்களது ஆவணங்களை விமான நிலைய அதிகாரிகளிடம் ஒப்படைத்துள்ளனர்.

சந்தேக நபர்களின் ஆவணங்கள் குறித்து சந்தேகமடைந்த விமான நிலைய அதிகாரிகள், அதனை குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைத்துள்ளனர்.

இதன்போது, விமான நிலைய குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்கள அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட சோதனையில், சந்தேக நபர்களின் கனடா விஸா போலியாக தயாரிக்கப்பட்டவை எனத் தெரியவந்துள்ளது.

சந்தேக நபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில்,

தரகர் ஒருவரிடம் 80 இலட்சம் ரூபா தருவதாகக் கூறி இந்த போலி கனடா விஸாவை தயாரித்துள்ளதாகவும், ஜப்பானின் நரிட்டா நகரத்துக்குச் சென்று பின்னர் அங்கிருந்து கனடாவுக்கு தப்பிச் செல்ல தயாராக இருந்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது. (அ)

# இந்த ஆண்டில் இதுவரை 9 காட்டுத் தீ சம்பவங்கள்!

கொழும்பு, பெப். 19

இந்த ஆண்டில் இதுவரை 9 காட்டுத் தீ சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக வனப் பாதுகாப்புத் திணைக்களம் தெரிவித்துள் ளது.

கண்டி மாவட்டத்தில் 4 தீ விபத்துகளும், இரத்தினபுரியில் 2 தீ விபத்துகளும், மாத்தளை, பதுளை மற்றும் நுவரெலியா மாவட்டங்களில் ஒரு தீ விபத்தும் பதிவாகியுள்ளன.

பதுளை, கண்டி, நுவரெலியா, மாத்தளை, இரத்தினபுரி, மொனராகலை மற்றும் கேகாலை மாவட்டங்கள் அடிக்கடி தீ விபத்து ஏற்படும் மாவட்டங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளதாக வனப் பாதுகாப்புத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஒவ்வொரு ஆண்டும், வெப்பமான காலநிலையினால் புல்வெளிகள்,

தோட்டங்கள் மற்றும் காடுகளில் தீ விபத்து ஏற்படுவது அதிகமாக உள்ளது.

2024 ஆம் ஆண்டில், 437 ஹெக்ரேயர் எரிந்துள்ளது.

காடுகளுக்கு அருகில் தீ வைப்பதைத் தவிர்க்குமாறு வனப் பாதுகாப்புத் திணைக்களம் பொதுமக்களைக் கேட்டுக் கொண்டுள்ளது. (அ)

# தியானம் செய்யும் மகிந்த!

கொழும்பு, பெப். 19

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இரகசியமாக சென்று வருவதாகக் கூறப்படும் கம்பஹா மாவட்டத்திலுள்ள தியான மையம் தொடர்பாக புதிய தகவல்கள் வெளியாகியுள்ளன.

தொழில் பிரதி அமைச்சர் மகிந்த ஜயசிங்க குறித்த தியான மையைப் பகுதிக்கு நேரில் சென்று விசாரணை மேற்கொள்ள முயன்றுள்ளார். எனினும், அங்கிருந்த பாதுகாப்பு அதிகாரிகளால் அவர் உள்ளே செல்லவதற்கான அனுமதி மறுக்கப்பட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த தியான மையம் தொடர்பாக உள்ளூர்வாசிகள் குழுவிடமிருந்து கிடைத்த தகவலை அடுத்து, பிரதி அமைச்சர் அங்கு சென்று சம்பவத்தை நேரில் கண்டறிய முயன்றதாக கூறப்படுகிறது.

கம்பஹாவின் யகோடா பகுதியில் அமைந்துள்ள இந்த மையத்தில் மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான தரப்பினர் செயல்பட்டு வருகின்றனர் என்பதற்கான முறைப்பாடுகள் எழுந்துள்ளன. இது தொடர்பாக அந்தப் பகுதி மக்கள் ஆளும் தரப்புக்கு முறைப்பாடு செய்ததை அடுத்து, அதனை ஆராயும் நோக்கில்பிரதி அமைச்சர்அங்கு சென்றுள்ளார்.

எனினும், மகிந்த தரப்பினரால் அவருக்கு தியான மையத்திற்குள் நுழைய அனுமதி மறுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தியான மையம் தொடர்பாக தொடர்ந்தும்புதிய தகவல்கள்வெளியாகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

# மல்வானை ஆடம்பர மாளிகை பஸில் ராஜபக்ஷவினுடையதே!

கொழும்பு, பெப். 19

கடந்த காலங்களில் பாரிய சர்ச்சையை ஏற்படுத்திய மல்வானை ஆடம்பர மாளிகை, முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷவினுடையதுதான் என மகிந்த ராஜபக்ஷவின் ஆஸ்தான சோதிடரான சுமணதாச அபேகுணவர்த்தன தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில், மல்வானை மாளிகைக்கு அடிக்கல் நாட்டுவதற்கான சுபமுகூர்த்தம் தன்னால் குறிக்கப்பட்டதாகவும், பஸில் ராஜபக்ஷவின் மனைவி புஷ்பா ராஜபக்ஷவின் வேண்டுகோளின் பேரில் அதனைச் செய்ததாகவும் அவர் கூறியுள்ளார்.

இதன்மூலம், இந்த மாளிகையின் உண்மையான உரிமையாளர் யார் என்பதற்கான விவாதம் மீண்டும் பரபரப்பாகியுள்ளது.

தற்போது அரசாங்கத்தினால் கையேற்கப்பட்டுள்ள இந்த மாளிகை, பராமரிப்பு இல்லாமல் பாழடைந்து போயுள்ளதாகவும், அரசின் சொத்தாக மாற்றப்பட்டதற்குப் பிறகும் அது பயன்படுத்தப்படாத நிலையில் உள்ளது எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

சுமணதாச அபேகுணவர்த்தன மேலும் கூறுகையில்-இத்தகைய ஆடம்பர மாளிகையொன்றைச் சாதாரண பொதுமகன் ஒருவரால் நிர்மாணிக்க முடியாது என்பதோடு, இதற்கான நிதி மூலோபாயம் குறித்தும் பொதுமக்கள் சந்தேகிக்க வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

# நாட்டில் வெப்பநிலை எச்சரிக்கை மட்டத்தில்!

கொழும்பு, பெப். 19

நாட்டின் பல பகுதிகளில் மனித உடலால் உணரப்படும் வெப்பநிலை நேற்று முதல் எச்சரிக்கை மட்டத்தை விட அதிகரிக்கும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

வடக்கு, வடமத்திய, வடமேல், தென் மற்றும் மேல் மாகாணங்களிலும் இரத்தினபுரி மாவட்டத்திலும் இந்த நிலை ஏற்படக் கூடும் என அந்த திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

இதன்காரணமாக வீடுகளில் உள்ள முதியோர் மற்றும் நோயாளர்கள் தொடர்பில் அவதானத்துடன் செயற்படு மாறு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

வாகனத்திற்குள் சிறார்களைத் தனிமையில் விட்டுச் செல்ல வேண்டாம் என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பணியாற்றுபவர்கள் இயன்றளவு நீரைப் பருக வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

பொதுவெளியில் கடுமையான பணிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்குமாறும் வெள்ளை அல்லது இலகுவான ஆடைகளை அணிந்து கொள்ளுமாறு வளிமண்டலவியல் திணைக்களம் பொதுமக்களைக் கோரியுள்ளது. (அ)

# தாக்கப்பட்டு ஒருவர் கொலை; 15 வயது சிறுவன் கைதானார்!

கொழும்பு, பெப். 19

கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவர் எஹெலியகொட பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் நேற்று முன் தினம் இரவு எஹெலியகொட பொலிஸ் பிரிவின் மோரகல சந்தி பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் ஆந்ராகல பகுதியைச் சேர்ந்த 15 வயதுடைய சிறுவன் என தெரிவிக்கப்படுகிறது.

2025 ஜனவரி 17 ஆம் திகதி, எஹெலியகொட பொலிஸ் பிரிவின் ஹொரகொட வீதியில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு ஒருவர் கொல்லப்பட்ட நிலையில் இரண்டு பேர் படுகாயமடைந்தனர்.

சம்பவம் தொடர்பில் எஹெலியகொட பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாணய நிதிய பணயக்கைதி போல் ஜனாதிபதி உட்பட அரசு மாறியுள்ளது!

## சஜித் பிரேமதாஸ குற்றச்சாட்டு

கொழும்பு, பெப். 19

**சர்வதேச நாணய நிதியம் விதித்த கட்டுப்பாட்டுக்குள் இருந்து தயாரிக்கப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தையே ஜனாதிபதி முன்வைத்துள்ளார் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**

ஜனாதிபதியின் வரவு - செலவுத் திட்ட உரையை தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்-

நாடு அநுரவுக்கு என்ற கொள்கைப் பிரகடனத்துக்கமைய பெரிய கேக் ஒன்றை தயாரிப்பதாகவே உறுதியளிக்கப்பட்டது. ஆனால், வரவு - செலவுத் திட்ட உரையை பார்க்கும்போது நாடு அநுரவுக்கு அல்ல நாணய நிதியத்துக்கு என்பது போன்றே இருக்கிறது.

அதாவது சர்வதேச நாணய நிதியம் விதித்த கட்டுப்பாட்டுக்குள் தயாரிக்கப்பட்ட வரவு - செலவுத் திட்டமாகவே இருக்கிறது. சர்வதேச நாணய நிதியத்தின் நிகழ்ச்சி நிரல்கள் இதில் உள்ளன. அதன்படி மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட வளங்களே முதலீட்டுக்காக ஒதுக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க சர்வதேச நாணய நிதித்தின் நிபந்தனைக்குள் இருக்கிறார். அவர்கள் கூறிய நிலைபேறான பொருளாதாரம் இந்த வரவு - செலவுத் திட்டத்தில் இல்லை.

இதனால் திருத்தங்களை முன்வைக்கும்போது திருத்தங்களை மேற்கொண்டு, மக்களுக்கு வாக்குறுதி அளித்த பிரகாரம் சௌபாக்கியமான நாடு என்ற கொள்கைப் பிரகடனத்தை செயற்படுத்தவேண்டும்.

எவ்வாறாயினும் நாடு அநுரவுக்கு என்று கூறிக்கொண்டு சர்வதேச நாணய நிதியத்தின் தாளத்துக்கு ஏற்றவாறு ஆடும் பயணமாகவே தெரிகிறது.

இவர்கள் இப்போது சர்வதேச நாணய நிதியத்தின் பணயக் கைதிகள் போன்று ஜனாதிபதி உள்ளிட்ட அரசாங்கம் மாறியுள்ளது. இது கவலைக்குரிய விடயமாகும். பெற்ற மக்கள் ஆணையை முழுமையாக மீறுவதாகவே நாங்கள் பார்க்கிறோம்-என்றார். (அ)

# எல்ல மலைத்தொடர் பிரதேசம் முழுவதும் தீ பரவும் அபாயம்!

கொழும்பு, பெப். 19

பதுளை, எல்ல சுற்றுலா நகரத்துக்கு அருகிலுள்ள எல்ல பாறை பகுதியில் ஏற்பட்ட தீ, தற்போது எல்ல மலைத்தொடர் முழுவதும் பரவும் அபாயத்தில் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பண்டாரவளை வன பாதுகாப்பு அதிகாரிகள், எல்ல பிரதேச செயலகம் மற்றும் தியத்தலாவை விமானப்படை மற்றும் இராணுவ அதிகாரிகள் இணைந்து எல்ல மலைத்தொடரில் பரவியுள்ள தீயை அணைக்க கடுமையாக போராடி வருகின்றனர்.

காற்றின் வேகம் மற்றும் செங்குத்தான சரிவுகள் காரணமாக தீயைக் கட்டுப்படுத்துவது கடினமாக இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனால், எல்ல பாறை பகுதியில் ஏற்பட்டுள்ள தீயானது, எல்ல மலைத்தொடர் முழுவதும் பரவும் அபாயத்தில் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தீ பரவலானது எல்ல, வெல்லவாய பிரதான வீதிக்கு நெருங்குவதைக் கட்டுப்படுத்துவதற்காக, பண்டாரவளை மாநகர சபையின் தீயணைப்பு வாகனங்களின் உதவியும் பெறப்பட்டுள்ளது.

இதேவேளை, ஹொரணை, பொரலுகொட கைத்தொழில் பேட்டையில் நேற்று முன்தினம் பிற்பகல் ஏற்பட்ட தீ ஓரளவுக்கு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தீயை கட்டுப்படுத்த ஹொரணை தீயணைப்பு பிரிவுக்கு மேலதிகமாக களுத்துறை, பாணந்துறை மற்றும் கம்பஹா ஆகிய இடங்களில் இருந்து தீயணைப்பு வாகனங்கள் பொரலுகொட கைத்தொழில் பேட்டைக்கு வரவழைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# கட்டுப்பாட்டு விலைக்கமைவாகவே அரிசியை விற்பனை செய்ய முடியும்!

## நுகர்வோர் அதிகார சபை அறிவிப்பு

கொழும்பு, பெப். 19

நாட்டில் அதிக விலைக்கு நெல்லை கொள்வனவு செய்தாலும் நிர்ணயிக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு விலைக்கமைவாகவே அரிசியை விற்பனை செய்ய முடியும் என நுகர்வோர் அதிகார சபையின் தலைவர் ஹேமந்த சமரக்கோன் தெரிவித்தார்.

அத்துடன் அதிக விலைக்கு நெல்லை கொள்வனவு செய்து இறுதித் தருணத்தில் நெருக்கடிக்குள்ளாகவேண்டாம் என பிரதான அரிசி உற்பத்தியாளர்களிடம் நுகர்வோர் அதிகார சபையின் தலைவர் ஹேமந்த சமரக்கோன் கோரிக்கை விடுத்தார்.

அரசாங்கத்தின் விலை நிர்ணயத்துக்கு மாறாக அதிக விலைக்கு ஒரு சில பகுதிகளில் தனியார் தரப்பினரும், தனியார் நிறுவனங்களும் நெல்லை கொள்வனவு செய்வதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அதிக விலைக்கு நெல்லை கொள்வனவு செய்தமைக்காக அரிசியின் கட்டுப்பாட்டு விலையை திருத்தம் செய்ய முடியாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கட்டுப் பாட்டு விலைக்கு மாறாக அதிக விலைக்கு அரிசியை விற்பனை செய்தால் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அந்தவகையில், தனியார் நபராயின் ஒரு இலட்சம் முதல் 5 இலட்சம் ரூபாய் வரையில் தண்டப்பணமும் அல்லது ஆறு மாத கால சிறை தண்டனைக்கு உள்ளாக நேரிடும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

தனியார் நிறுவனமாயின் ஒரு இலட்சம் முதல் 5 மில்லியன் வரையில் தண்டப்பணம் விதிக்கப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அதேநேரம், எதிர்வரும் பண்டிகை காலத்தை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் சுற்றிவளைப்புக்களை முன்னெடுப்பதால், நிர்ணய விலைக்கு மாறாக அதிக விலைக்கு பொருட்களை விற்பனை செய்வதை தவிர்த்துக் கொள்ளுமாறு வர்த்தகர்களிடம் கோரிக்கை விடுப்பதாக நுகர்வோர் அதிகார சபையின் தலைவர் ஹேமந்த சமரக்கோன் மேலும் தெரிவித்தார். (அ)

# மீண்டும் பணியில் இணையும் பொலிஸாருக்கு போதைப்பொருள் சோதனை கட்டாயமானது!

கொழும்பு, பெப். 19

இடைநீக்கம் செய்யப்பட்ட பிறகு அல்லது சேவையை விட்டு வெளியேறிய பிறகு மீண்டும் பணியில் சேரும் பொலிஸ் அதிகாரிகள், போதைப்பொருள் பயன்பாட்டைக் கண்டறிய மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்துவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி பொலிஸ் ஊடகப் பிரிவு ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளதுடன் பொலிஸ் அதிகாரிகள், பணியமர்த்தப்படுவதற்கு அல்லது மீண்டும் பணியில் அமர்த்தப்படுவதற்கு முன்பு, போதைப்பொருள் பயன்பாட்டைக் கண்டறிய பொலிஸ் மருத்துவமனையில் பொருத்தமான விசாரணைக்கு உட்படுத்தப்படவேண்டும் என அனைத்து மூத்த அதிகாரிகள் மற்றும் பொலிஸ் அதிகாரிகளுக்கு பதில் பொலிஸ்மா அதிபர் அறிவித்துள்ளார்.

மேலும் மருத்துவ அறிக்கையில் ஒரு அதிகாரி போதைப் பொருள் பயன்படுத்தியதாக தெரியவந்தால், அந்த அதிகாரி மீண்டும் பணியில் சேர்க்கப்படமாட்டார் அல்லது பணியில் மீண்டும் சேர அனுமதிக்கப்படமாட்டார் என்று அவர் குறிப்பிட்டார். (அ)

# வெளிநாட்டு சிகரெட்டுக்களுடன் விமான நிலையத்தில் மூவர் கைது!

கொழும்பு, பெப். 19

சட்டவிரோதமான முறையில் பெருந்தொகையான வெளிநாட்டு சிகரெட்டுகளை நாட்டிற்கு கடத்த முற்பட்ட வெளிநாட்டுப் பிரஜை, பெண் உட்பட மூவரை கட்டுநாயக்க விமான நிலைய அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவின் கட்டுநாயக்க விமான நிலையப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட தனித்தனியான சோதனையின் போது இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் துபாயிலிருந்து வந்த 51 வயதான இந்தியர் ஒருவர் பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தின் வருகை முனையத்தில் கைது செய்யப்பட்டார்.

நாட்டிற்கு சட்டவிரோதமான முறையில் கொண்டுவரப்பட்ட 15,000 வெளிநாட்டு சிகரெட்டுகள் (75 அட்டைப் பெட்டிகள்) சந்தேக நபரிடமிருந்து மீட்கப்பட்டன.

நேற்று மேற்கொள்ளப்பட்ட மற்றொரு சோதனையின் போது, டுபாயிலிருந்து கடத்திவரப்பட்ட 21,200 வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் (106 அட்டைப்பெட்டிகள்) இளைஞன் ஒருவர் வருகை முனையத்தில் கைது செய்யப்பட்டார்.

23 வயதான இவர் ரஸ்நாயக்கபுரவைச் சேர்ந்தவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார். மேலும், நேற்று 46,800 வெளிநாட்டு சிகரெட்டுகளை (234 அட்டைப்பெட்டிகள்) டுபாயில் இருந்து கடத்த முயன்றதற்காக பன்னிபிட்டியைச் சேர்ந்த 48 வயதுடைய பெண் ஒருவரும் கைது செய்யப்பட்டார். (அ)

# “எங்கள் அரசில் ஆரம்பித்தவற்றை தேசிய மக்கள் சக்தி தொடர்கிறது”

கொழும்பு, பெப். 19

எமது அரசாங்கத்தில் ஆரம்பித்தவற்றை தேசிய மக்கள் சக்தி தொடர்கிறது என்பது வரவு-செலவுத் திட்டத்தின் ஊடாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது என புதிய ஜனநாயக முன்னணி உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

ஜனாதிபதியின் வரவு செலவுத் திட்ட உரையை தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-2015, 2016 மற்றும் 2017 காலப்பகுதியில் செய்தவற்றை 2023, 2024ஆம் ஆண்டில் மீண்டும் ஆரம்பித்தவற்றை முன்னெடுத்துச் செல்வதை போன்றே இந்த வரவு-செலவுத் திட்டத்தை பார்க்கின்றோம். அவற்றின் கொள்கைகளை மீறாமல் நிதி ஒழுக்கம் தெளிவாக உள்ளது. இது நாட்டுக்கு பொருத்தமானது. அப்போது ஆரம்பிக்கப்பட்ட விடயங்களையே முன்னெடுத்துச் செல்கின்றனர். மாற்றமில்லாத கொள்கையே இருக்கின்றது.

நாங்கள் அன்று அரசாங்கமாக ஆரம்பித்து கொண்டு சென்றவற்றை இவர்கள் கொண்டு செல்கின்றனர். இது தொடர்பில் மகிழ்ச்சியடைகின்றோம்

அதேநேரம் அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்பாக 15ஆயிரம் அதிகரித்திருப்பது 3 வருடங்களுக்காகும். அரசாங்கத்தினால் தாங்கிக்கொள்ள முடியாததாலேயே இதை 3 கட்டங்களுக்கு பிரித்திருக்கிறது. புதிய வேலைத்திட்டங்கள் எதுவும் இந்த வரவு-செலவுத் திட்டத்தில் இல்லை-என்றார். (அ)

# க.பொ.த சாதாரண தரப் பரீட்சையின் மீள்பரிசீலனை பெறுபேறு வெளியீடு

கொழும்பு, பெப். 19

2023 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையின் மீள்பரிசீலனை பெறுபேறுகள் நேற்று முன் தினம் நள்ளிரவு வெளியிடப்பட்டன.

பரீட்சைகள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தள முகவரி ஊடாக பிரவேசித்து பரீட்சை இலக்கம் அல்லது தேசிய அடையாள அட்டை இலக்கத்தை உள்ளிடுவதன் மூலம் பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பரீட்சைப் பெறுபேறுகள் தொடர்பாக ஏதேனும் சந்தேகம் காணப்படுமாயின் 1911 எனும் துரித இலக்கம் அல்லது 0112784208, 0112784537, 0112785922 எனும் தொலைப்பேசி இலக்கங்களுக்கு அழைப்பினை மேற்கொண்டு பாடசாலைப் பரீட்சை அமைப்பு மற்றும் பெறுபேறுகள் பிரிவினை தொடர்புகொள்ளுமாறும் பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவ பராமரிப்புப் பிரிவை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை



கல்முனை, பெப்.19

அம்பாறை, கல்முனை - சேனைக்குடியிருப்பு ஆரம்ப மருத்துவ பராமரிப்புப் பிரிவின் சேவையை மேம்படுத்தி அப்பகுதி மக்களுக்கு வினைத்திறன் மிக்க சுகாதார சேவையை வழங்கும் பொருட்டு விசேட கூட்டமொன்று நேற்று முன்தினம் நடைபெற்றது


கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் திருமதி சகீலா இஸ்ஸதீன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் பிராந்திய கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி எம். சி. எம். மாஹிர், சேனைக்குடியிருப்பு ஆரம்ப மருத்துவ பராமரிப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி எம். பி. எம். ஷில்மி, மருத்துவர் திருமதி புஷ்பலதா லோகநாதன் உள்ளிட்ட கலந்து கொண்டனர்.

அரச திணைக்களங்களின் ஒத்துழைப்புடன் மருத்துவமனைக்குத் தேவையான மேலதிக காணியைப் பெற்று சேவையை விஸ்தரித்தல்,

பௌதீக வளப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்தல், புதிதாக கட்டடங்களை நிர்மாணித்தல் எனப் பல முக்கிய விடயங்கள் குறித்து இதன் போது கவனம் செலுத்தப்பட்டது.

இதேவேளை, மருத்துவமனைக்குத் தேவையான தளபாடங்கள், அலுவலக பாவனைக்குத் தேவையான இலத்திரனியல் உபகரணங்கள் என்பன பிராந்திய பணிப்பாளரால் கையளிக்கப்பட்டன. (எ)

# நிர்வாகச் சீர்கேடுகளுக்கு எதிராக நிந்தவூரில் கண்டன ஆர்ப்பாட்டம்



கல்முனை, பெப்.19

**இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் கீழ் இயங்கும் நிந்தவூர் தொழிற்பயிற்சி நிலையத்தில் பணிபுரியும் அம்பாறை மாவட்ட தமிழ் மொழிமூல அனைத்து போதனாசிரியர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் நிர்வாகச் சீர்கேடுகளுக்கு எதிராக கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.**

குறித்த தொழிற்பயிற்சி நிலையம் முன்பு நேற்று முன்தினம் திங்கட்கிழமை இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பிரதிப் பணிப்பாளரின் நிர்வாக முறைமையில் அதிருப்தியடைந்த சகல உத்தியோகத்தர்களும் இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை ஒருங்கிணைந்த சுதந்திர தொழிற் சங்க செயலாளர் நிஹால் விதானகேவின் வழிகாட்டுதலில் இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர். அத்தோடு,

பிரதிப் பணிப்பா ளரை உடனடியாக இடமாற் றம் செய்யக் கோரினர். (எ- 01)

# கிளினிக் நிலைய சேவைகளை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை

கல்முனை, பெப்.19

அம்பாறை, இறக்காமம் - வாங்காம பிரதேச மக்களின் நலன் கருதி அப் பிரதேசத்தில் அமைந்துள்ள கிளினிக் நிலையத்தின் சேவைகளை மேம்படுத்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் திருமதி சகீலா இஸ்ஸதீனிடம் வாங்காமம் பிரதேச மக்கள் விடுத்த வேண்டுகோளின் பிரகாரம் வாரத்தில் திங்கள் மற்றும் வெள்ளி ஆகிய இரு தினங்கள் முன்னெடுக்கப்பட்ட கிளினிக் சேவையை மூன்று தினங்களாக அதிகரிக்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

ஆளணி மற்றும் வளப் பற்றாக்குறை காரணமாக மட்டுப்படுத்தப்பட்ட சேவைகளை மாத்திரம் வழங்கிக்கொண்டிருக்கும் வாங்காமம் கிளினிக் நிலையத்தில் எதிர்வரும் காலங்களில் ஆரம்ப மருத்துவ பராமரிப்பு பிரிவு ஒன்றை திறப்பதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளையும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் முன்னெடுத்து வருகிறார். (எ)

# கஜ முத்துக்களுடன் இளைஞன் கைது!

திருமலை, பெப்.19

திருகோணமலை - நிலாவெளி வீதியில் உப்புவெளி பஸ் நிலையத்துக்கு அருகில் இரண்டு கஜ முத்துக்களுடன் இளைஞன் ஒருவர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உப்புவெளி பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவ ளைப்பு நடவடிக்கையின் போதே குறித்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் ஊர்காவற்றுறை பகுதியைச் சேர்ந்த 28 வயதுடைய இளைஞன் ஆவார்.

இது தொடர்பில் உப்புவெளி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# இரண்டு மோட்டார் சைக்கிள்கள் சம்மாந்துறையில் மோதி விபத்து



கல்முனை, பெப்.19

இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் காயங்களுக்குள்ளாகினர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை அம்பாறை, கல்முனை பிரதான வீதியில் சம்மாந்துறை பொலிஸ் நிலையத்துக்கு அருகில் இடம்பெற்றுள்ளது.

குறித்த விபத்தில் சிக்கிய இருவர் காயங்களுடன் சம்மாந்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)



**கல்முனை சாஹிரா தேசிய பாடசாலையின் பழைய மாணவரும், ஆசிரியருமான பாராளுமன்ற உறுப்பினர் அபூபக்கர் ஆதம்பாவாவை பாராட்டிக் கௌரவித்து, முடிசூட்டிய விழா கல்முனை சாஹிரா தேசிய பா சாலையில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்றது.**

# கவர்ச்சிகரமான சுற்றுலாத்தலம் விசேட வேலைத்திட்டம் நிறைவு




காரைதீவு, பெப்.19

நாடு தழுவிய ரீதியில் "சுத்தமான கடற்கரை - கவர்ச்சிகரமான சுற்றுலாத்தலம்" எனும் தொனிப்பொருளில் கடற்கரை சூழலை சுத்தம் செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டத்தின் கீழ் காரைதீவு பிரதேச செயலகம், பிரதேச சபை மற்றும் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகமும் இணைந்து அம்பாறை, மாளிகைக்காடு, காரைதீவு கடற்கரை பிரதேசத்தை சுத்தம் செய்யும் விசேட வேலைத்திட்டம் நேற்று முன்தினம் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டுள்ளது.

திகாமடுல்ல பாராளுமன்ற உறுப்பினர் ஏ. ஆதம்பாவாவின் பங்குபற்றலுடன் காரைதீவு பிரதேச செயலாளரின் தலைமை மற்றும் வழிகாட்டலில் கல்முனை பிராந்திய தொழில் சார் நலன் மற்றும் உணவுப் பாதுகாப்பு வைத்திய அதிகாரி ஏ. எஸ். எம். பௌசாட், நுளம்பு களத்தடுப்புப் பிரிவினர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், காரைதீவு பிரதேச சபை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், படையினர், பொது நிறுவனங்கள், சிவில் அமைப்புகள் மற்றும் பொது மக்கள் எனப்பலரும் இதில் பங்கேற்று தமது முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்கினர்.

தூய்மையான சூழலில் - ஆரோக்கியமான வாழ்வு எனும் தொனிப்பொருளில் முன்னெடுக்கப்பட்ட இந்தத் திட்டத்தின் மூலம், சுத்தமான சூழலை உருவாக்கவும், நம் இயற்கையை பாதுகாக்கவும் முக்கியமான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என திட்ட ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (எ)

**உலகளாவிய இராம கிருஷ்ண மடம் மற்றும் மிஷனின் துணைத் தலைவர் சிறீமத் சுவாமி சுஹிதானந்தஜி மஹராஜ்ஜிற்கு காரைதீவில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மகத்தான வரவேற்பு வழங்கப்பட்டது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிவியாவில் பஸ் விபத்து 30 பேர் பலி, 14 பேர் படுகாயம்

லாபாஸ், பெப்.19

**பொலிவியாவில் இடம்பெற்ற பஸ் விபத்தில் சிக்கி 30 பேர் பரிதாபமாக பலியாகினர். நான்கு குழந்தைகள் உட்பட 14 பேர் படுகாயமடைந்தனர்.**

நேற்று அதிகாலை யோகல் லாவின் தென்மேற்கு நகராட்சியில் உள்ள ஒரு பள்ளத்தாக்கிலிருந்து சென்று கொண்டிருந்த பஸ் ஒன்று, சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து, கிட்டத்தட்ட 800 மீற்றர் கீழே விழுந்ததாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

விபத்தில் படுகாயமடைந்தவர்களில் நான்கு குழந்தைகள் உட்பட 14 பேர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். பலர் தீவிர சிகிச்சையில் உள்ளனர் என்று மருத்துவமனை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறுகையில், மலைப்பாதையில் திருப்பங்கள் நிறைந்த பகுதியில் வேகமாக பயணித்தமை விபத்துக்கு ஒரு காரணமாக இருக்கலாம்-என்றார். (எ)

# கனடாவில் தரையிறங்கிய விமானம் விபத்தில் சிக்கியது

## 19 பேர் மருத்துவமனையில் அனுமதி




ரொரண்டோ, பெப்.19

கனடாவின் ரொரண்டோ பியர்சன் சர்வதேச விமான நிலையத்தில் விமானம் ஒன்று விபத்துக்குள்ளாகியுள்ளது. இதில், 19 பேர் காயமடைந்ததாக தகவல் வெளியாகியுள்ளது. விமானம் தரையிறங்கும் போது இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இது குறித்து விமான நிலையம் வெளியிட்ட எக்ஸ் பதிவில், சி. ஆர். ஜே. 900 என்ற விமானம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை பிற்பகல் 03: 30 மணியளவில் ரொரண்டோ பியர்சன் சர்வதேச விமான நிலையத்தில் தரையிறங்கிய போது விபத்தில் சிக்கியது. விமானத்தில் மொத்தம் 80 பேர் இருந்தனர்.

உயிரிழப்புகள் ஏதும் ஏற்படவில்லை. விபத்தில் காயமடைந்தவர்கள் அருகிலுள்ள மருத்துவமனைகளுக்கு கொண்டு செல்லப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# பங்களாதேஷுக்கு திரும்பி வருவேன்!

## ஷேக் ஹசீனா உறுதி

டாக்கா, பெப்.19

நான் பங்களாதேஷுக்கு மீண்டும் வருவேன். பாதிக்கப்பட்ட அனைவருக்கும் நீதி கிடைப்பதை உறுதி செய்வேன் என்று முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனா தெரிவித்தார்.

மாணவர்கள் போராட்டம் காரணமாக பிரதமர் பதவியை இராஜினாமா செய்த ஷேக் ஹசீனா, இந்தியாவில் தஞ்சமடைந்தார். இந்த நிலையில், பங்களாதேஷில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்ச்சியில் நேரலையில் ஷேக் ஹசீனா உரையாற்றினார்.

அப்போது அவர், "நான் திரும்பி வருவேன். அதனால் தான் அல்லா என்னை உயிருடன் வைத்திருக்கிறார். பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு உரிய நீதி கிடைப்பதை உறுதி செய்வேன். போராட்டத்தின் போது மக்களை கொன்றவர்களை சட்டத்தின் முன் நிறுத்தி அவர்கள் தண்டனை பெறுவதை உறுதி செய்வேன். முகமது யூனுஸ் ஆட்சி செய்யத் தகுதியற்றவர். கொல்லப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு யூனுஸின் ஆட்சியின் கீழ் நீதி கிடைக்காது"- என்றார். (எ)

# லெபனானில் இஸ்ரேல் தாக்குதல் ஹமாஸ் முக்கிய தளபதி மரணம்

பெய்ரூட், பெப்.19

லெபனானில் இஸ்ரேல் நடத்திய ட்ரோன் தாக்குதலில் ஹமாஸ் அமைப்பின் முக்கிய தளபதி முகமது ஷாஹின் உயிரிழந்தார்.

நேற்று முன்தினம் மாலை சிடோன் நகரில் முக்கிய வீதியில் சென்ற கார் மீது ட்ரோன் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தத் தாக்குதலில் ஹமாஸ் ஆயுதக்குழுவின் முக்கிய தளபதி முகமது ஷாஹின் கொல்லப்பட்டார்.

முகமது ஷாஹின் ஹமாஸ் அமைப்பின் லெபனான் பிரிவு தலைவராகவும் செயல்பட்டு வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)



# கட்டடம் இடிந்து விழுந்து எகிப்தில் 10 பேர் மரணம்

கெய்ரோ, பெப்.19

எகிப்தில் குடியிருப்பு கட்டடம் இடிந்து விழுந்த விபத்தில் சிக்கி 10 பேர் உயிரிழந்தனர்.

கிசா மாகாணம் கெர்டாசா நகரில் குடியிருப்பு கட்டடம் நேற்று முன்தினம் காலை திடீரென இடிந்து விழுந்தது. இந்த விபத்தில் கட்டடத்தில் வசித்து வந்த பலர் சிக்கிக் கொண்டனர்.

தகவலறிந்து விரைந்து வந்த மீட்புக்குழுவினர் கட்டட இடிபாடுகளுக்குள் சிக்கியவர்களை மீட்கும் பணியில் ஈடுபட்டனர். ஆனால்,

இந்த கட்டட விபத் தில் 10 பேர் உயிரிழந்தனர். மேலும், 3 பேர் படுகாயம டைந்தனர்.

ஹாஸ் சிலிண்டர் வெடித்து குடியிருப்பு கட்டடம் இடிந்து விழுந்ததாக முதற்கட்ட தகவல் வெளியாகியுள்ளது.

இந்தச் சம் பவம் குறித்து பொலிஸார் விசா ரணை நடத்தி வருகின்றனர். (எ)

# போப்பாண்டவர் பிரான்சிஸ்ஸின் சுவாச குழாயில் தீவிரத் தொற்று!

## தொடர்ந்து சிகிச்சை வழங்க முடிவு



ரோம், பெப்.19

போப்பாண்டவர் பிரான்சிஸ்ஸின் சுவாச குழாயில் தீவிரத் தொற்று ஏற்பட்டுள்ளது. இதனால், அவருக்கு தொடர்ந்து சிகிச்சை வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

கத்தோலிக்க திருச்சபையின் தலைவராக இருந்து வரும் போப்பாண்டவர் பிரான்சிஸ் (வயது- 88) கடந்த வாரம் உடல்நலம் பாதிக்கப்பட்டு ரோம் நகரில் உள்ள மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

அவருக்கு சுவாச குழாயில் பாதிப்பு ஏற்பட்டு உள்ளது. இந்த நிலையில், போப்பாண்டவருக்கு சுவாச தொற்று அதிகரித்து காணப்படுகிறது. இதனால், அவருக்கு தொடர் சிகிச்சை தேவைப்படுகிறது என மருத்துவமனை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இது குறித்து வாடிகன் செய்தித் தொடர்பாளர் மத்தியூ புருனி கூறுகையில், "வைரஸ்கள், பக்றீரியா, பூஞ்சை மற்றும் ஒட்டுண்ணிகள் என பல வகையான தொற்று பாதிப்புகளால் போப்பாண்டவர் அவதிப்பட்டு வருகிறார். நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடந்த பரிசோதனை முடிவில், அவருக்கு சுவாச குழாயில் கலவையான தொற்று ஏற்பட்டிருப்பது என உறுதியாகியுள்ளது.

இதனால், அவருக்கு தொடர்ந்து சிகிச்சை வழங்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது"- என்றார். (எ)

# தாய்வான் நீரிணையில் கனடா போர்க்கப்பல்!

## கண்டனம் தெரிவித்தது சீனா

பீஜிங், பெப்.19

தாய்வான் நீரிணையில் கனடா போர்க்கப்பல் பயணித்ததற்கு சீனா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

கனடாவின் போர்க்கப்பல் பயணித்ததை நேற்று முன்தினம் சீன இராணுவம் கண்டித்தது. அமெரிக்க கடற்படை கப்பல்கள் இதேபோன்ற பயணத்தை மேற்கொண்ட சில நாட்களுக்குப் பிறகு,

சீனாவின் வான் மற்றும் கடற்படையினர் அந்தக் கப்பலை கண்காணித்து எச்சரித்ததாக கூறப்பட்டுள்ளது.

அமெரிக்க கடற்படையும், எப்போதாவது கனடா, பிரிட்டன் மற்றும் பிரான்ஸ் போன்ற நட்பு நாடுகளின் கப்பல்களும், சர்வதேச நீர்வழியாகக் கருதும் தாய்வான் நீரிணையை கடந்து செல்கின்றன. தாய்வானும் இதனை ஒரு சர்வதேச நீர்வழியாகக் கருதுகிறது.

ஆனால், தாய்வானை அதன் சொந்தப் பிரதேசமாகக் கருதும் சீனா, இந்த மூலோபாய நீர்வழி தனக்குச் சொந்தமானது உரிமை கோரி வருகிறது.

இந்த நிலையில், கனடாவின் போர்க்கப்பல் தாய்வான் நீரிணையில் சென்றதற்கு சீனா தரப்பில் கடும் கண்டனம் வெளியிடப்பட்டுள்ளது. மேலும், தனது கடற்படையினர்களையும் சீனா குவித்து வருவதால் அங்கு பதற்றமான சூழல் நிலவுகிறது. (எ)

# உக்ரைன் அமைதிக்காக ஜெலன்ஸ்கியுடன் பேச்சு

## பிரான்ஸ் ஜனாதிபதி தெரிவிப்பு

பாரிஸ், பெப்.19

உக்ரைனில் நீண்டகாலம் நிலைக்கக்கூடிய அமைதி ஏற்படுவதற்காக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், உக்ரைன் ஜனாதிபதி விளாடிமிர் ஜெலன்ஸ்கியுடன் பேசியுள்ளேன் என்று பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவல் மக்ரோன் தெரிவித்துள்ளார்.

பிரான்ஸ் ஜனாதிபதி தலைமையில் ஐரோப்பிய நாடுகளின் தலைவர்கள் பங்கேற்ற கூட்டம் பாரிஸ் நகரில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இது தொடர்பில் மக்ரோன் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "ஐரோப்பிய தலைவர்கள் பலரை ஒன்றிணைத்து கொண்டு வந்துள்ளேன். அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் மற்றும் உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி ஆகியோருடன் நான் பேசியிருக்கிறேன்.

உக்ரைனில் வலுவான மற்றும் நீண்டகால அமைதி வேண்டும் எனக் கேட்கிறோம். இதனை அடைவதற்கு, ரஷ்யா அதன் ஆக்கிரமிப்பை நிறுத்த வேண்டும்.

அதனுடன், உக் ரைன் மக்களுக்கு வலிமையான மற்றும் நம்பத்தக்க பாதுகாப்பு உத்தரவாதங்களும் அளிக்கப்பட வேண்டும்.

இந்த விவகாரத்தில் ஐரோப்பியர்கள்,

அமெரிக் கர்கள் மற்றும் உக்ரைனியர்கள் அனைவருடனும் இணைந்து பணியாற்றுவோம்"- என்று குறிப்பிட்டுள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8 விக்கெட் வித்தியாசத்தில் ஆர். சி. பி. அபார வெற்றி!




வதோதரா, பெப்.19

8 விக்கெட்கள் வித்தியாசத்தில் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு (ஆர். சி. பி) அணி அபார வெற்றிபெற்றது.

5 அணிகள் பங்கேற்றுள்ள 3 ஆவது மகளிர் பிரீமியர் லீக் (டபிள்யூ. பி. எல்.) தொடர் இந்தியாவின் குஜராத் மாநிலம் வதோதராவில் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற 4ஆவது லீக் ஆட்டத்தில் நடப்பு சம்பியன் றோயல் சலஞ்சர்ஸ் - டில்லி கப்பிட்டல்ஸ் அணிகள் மோதின.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய டில்லி அணி, 19. 3 ஓவர்கள் மட்டும் விளையாடி141 ஓட்டங்கள் எடுத்தது. சிறப்பாக பந்து வீசிய ரேணுகா தாகூர் சிங் மற்றும் ஜார்ஜியா வாரிஹாம் ஆகியோர் தலா 3 விக்கெட்களும், கிம் கார்த் மற்றும் எக்தா பிஸ்த் ஆகியோர் தலா 2 விக்கெட்களும் வீழ்த்தி அசத்தினர்.

இதனையடுத்து 142 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய ஆர். சி. பி. அணியின் சார்பில் ஸ்மிருதி மந்தனா மற்றும் யாட் ஹாட்ஜ் ஆகியோர் தொடக்கம் முதலே அதிரடியாக ஓட்டங்கள் குவித்தனர். மந்தனா 27 பந்துகளில் தனது அரைச்சதத்தை பதிவு செய்து அசத்தினார். மறுமுனையில் சீரான வேகத்தில் ஓட்டங்கள் சேர்த்துக் கொண்டிருந்த ஹாட்ஜ் 42 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அடுத்ததாக மந்தனாவுடன், பெர்ரி ஜோடி சேர்ந்தார். தொடர்ந்து ஓட்டங்கள் குவிப்பில் ஈடுபட்ட மந்தனா அணியை வெற்றிப்பாதைக்கு அழைத்துச் சென்றார். அணியின் வெற்றிக்கு 9 ஓட்டங்களே தேவைப்பட்டநிலையில் மந்தனா 81 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

இறுதியில் ரிச்சா கோஸ் 11 ஓட்டங்களும், எலிஸ் பெர்ரி 7 ஓட்டங்களும் எடுக்க ஆர். சி. பி. அணி 16. 2 ஓவர்களில் 2 விக்கெட்களை மட்டும் இழந்து 146 ஓட்டங்கள் எடுத்து 8 விக்கெட்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

டில்லி அணியின் சார்பில் அருந்ததி ரெட்டி மற்றும் ஷிகா பாண்டே ஆகியோர் தலா ஒரு விக்கெட் வீழ்த்தினர். (எ)

# சம்பியன்ஸ் தொடர் இன்று தொடக்கம்

## இந்திய தேசிய கொடி ஏன் ஏற்றப்படவில்லை?

கராச்சி, பெப்.19


பாகிஸ்தான், இந்தியா, அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா, இங்கிலாந்து, நியூசிலாந்து, பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான் ஆகிய 8 அணிகள் பங்கேற்கும் 9ஆவது சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் போட்டி பாகிஸ்தான் மற்றும் டுபாயில் இன்று 19ஆம் திகதி முதல் மார்ச் 9ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. பாதுகாப்பு கருதி இந்திய அணி பாகிஸ்தான் செல்ல மறுத்ததால் இந்திய அணிக்குரிய ஆட்டங்கள் மட்டும் டுபாயில் நடைபெறவுள்ளன.

இன்று கராச்சியில் நடைபெறும் தொடக்க லீக் ஆட்டத்தில் பாகிஸ்தான் - நியூசிலாந்து அணிகள் மோதுகின்றன. இதனையொட்டி கராச்சி மைதானத்தில் ஏற்பாடுகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. இந்த மைதானத்தில் இந்தியாவை தவிர்த்து மற்ற 7 நாடுகளின் தேசியக் கொடிகள் பறக்க விடப்பட்டுள்ளன.

இந்திய தேசிய கொடி கராச்சி மைதானத்தில் ஏன் ஏற்றப்படவில்லை? என்பது குறித்த தகவலை பாகிஸ்தான் கிரிக்கெட் சபை நிர்வாகி ஒருவர் வெளிப்படுத்தியுள்ளார்.

அவர் கூறுகையில்,"இந்திய அணி சில காரணங்களால் எங்கள் நாட்டுக்கு வர முடியாது என்று கூறி இங்கு வந்து விளையாடுவதை தவிர்த்து விட்டது. அதனால், போட்டிகளை டுபாய்க்கு மாற்றினார்கள். அதனால் இங்கு வந்து விளையாடப் போகும் நாடுகளின் கொடிகளை மட்டுமே ஏற்றியுள்ளோம்"- என்று கூறினார்.(எ)

# காயத்தால் மைதானத்தில் சுருண்டு விழுந்த ரிஷப்!




டுபாய், பெப்.19

பயிற்சியின் போது காலில் காயமடைந்த ரிஷப் பண்ட் மைதானத்தில் சுருண்டு விழுந்தார்.

8 அணிகள் இடையிலான 9ஆவது ஐ. சி. சி. சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் போட்டி பாகிஸ்தானில் இன்று பிற்பகல் 02. 30 மணிக்கு தொடங்குகிறது. இதில், பாகிஸ்தான் - நியூசிலாந்து அணிகள் மோதுகின்றன.

இந்தத் தொடருக்கான இந்திய அணியினர் டுபாய் புறப்பட்டு சென்று அங்கு தீவிர பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில், பயிற்சியின்போது ஹர்த்திக் பாண்டியா அடித்த பந்து மைதானத்தில் நின்று கொண்டிருந்த ரிஷப் பண்ட் காலில் வேகமாக தாக்கியது. இதனால், அவர் மைதானத்திலேயே சுருண்டு விழுந்து வலியால் துடித்தார்.

இதனையடுத்து சக வீரர்கள் மற்றும் மருத்துவ குழுவினர் விரைந்து வந்து அவருக்கு முதலுதவி சிகிச்சை அளித்து ஓய்வறைக்கு கொண்டு சென்றனர். அரை மணி நேரம் கழித்து மீண்டு வந்த ரிஷப் பண்ட் பயிற்சியில் ஈடுபட்டார். காயத்தின் முழுமையான தன்மை குறித்து விவரங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை. (எ)

# ஏன் நீக்கினார்கள் என்று எனக்கு தெரியவில்லை?

## ரஹானே வருத்தம்

மும்பை, பெப்.19



இந்திய அணியிலிருந்து என்னை ஏன் நீக்கினார்கள் என்று தெரியவில்லை- இவ்வாறு துடுப்பாட்ட வீரர் அஜிங்ஹியா ரஹானே வருத்தம் வெளியிட்டுள் ளார்.

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னணி வீரர் ரஹானே கடைசி யாக 2023ஆம் ஆண்டு மேற்கு இந்திய தீவுக ளுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் விளையாடினார். அதன் பிறகு அவருக்கு இந்திய அணியில் இடம் கிடைக் கவில்லை.

இந்த நிலையில் இந்திய அணியிலிருந்து தான் நீக்கப்பட்டது குறித்து ரஹானே மிக வருத்தத்துடன் சில கருத்துகளை வெளியிட்டுள்ளார்.

அதில், "சில வருடங்களுக்கு முன்பு நான் இந்திய அணியிலிருந்து கழற்றி விடப்பட்டேன். ஆனாலும், மீண்டும் எனது சிறப்பான ஆட்டத்தின் மூலம் உலக டெஸ்ட் தொடரின் இறுதிப்போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டேன். அந்தப் போட்டியில் நான் சிறப்பாக செயல்பட்ட போதும் ஏன் திடீரென அணியிலிருந்து என்னை நீக்கினார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. ஒரு மூத்த வீரராக எனக்கு இன்னும் ஒரு சில வாய்ப்புகள் கிடைக்கும் என்று நினைத்தேன்.

ஆனால், என்னை திடீரென புறக்கணித்தார்கள். இது குறித்து நான் யாரிடமும் எதுவும் கேட்கப் போவது கிடையாது. ஏனெனில் அப்படிப்பட்ட ஆளும் நான் கிடையாது. என்னுடைய சிறப்பான செயல்பாடு மூலம் தான் மீண்டும் இந்திய அணிக்குத் திரும்ப முயற்சிப்பேன். எனக்குள் இன்னும் அந்த பழைய நெருப்பும், ஆர்வமும் மிஞ்சி இருக்கிறது"- என்றார். (எ)

# முதல் போட்டியில் விளையாட ஹர்த்திக் பாண்டியாவுக்கு தடை

மும்பை, பெப்.19

2025 ஐ. பி. எல். முதல் போட்டியில் விளையாட மும்பை அணியின் தலைவர் ஹர்த்திக் பாண்டியாவுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.



18 ஆவது ஐ. பி. எல். தொடருக்கான அட்டவணையை இந்திய கிரிக்கெட் சபை அதிகாரபூர்வமாக வெளியிட் டது. இதன்படி, அடுத்த மாதம் (மார்ச்) 22ஆம் திகதி தொடங்கும் ஐ. பி. எல். போட்டிகள் மே 25 ஆம் திகதி நிறைவடையவுள்ளன.

இதில் பங்கேற்கும் 10 அணிகள் இரு பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளன. இதன்படி சென்னை சுப்பர் கிங்ஸ், கொல்கத்தா நைட் ரைடர்ஸ், பெங்களூரு றோயல் சலஞ்சர்ஸ், ராஜஸ்தான் றோயல்ஸ், பஞ்சாப் கிங்ஸ் ஆகிய அணிகள் ஒரு பிரிவிலும், மும்பை இந்தியன்ஸ், குஜராத் டைட்டன்ஸ், டில்லி கப்பிட்டல்ஸ், ஐதராபாத் சன்ரைசர்ஸ், லக்னோ சுப்பர் ஜெயன்ட்ஸ் ஆகிய அணிகள் மற்றொரு பிரிவிலும் அங்கம் வகிக்கின்றன.

ஒவ்வொரு அணியும் தங்கள் பிரிவில் உள்ள அணிகளுடன் தலா 2 முறையும், எதிர் பிரிவில் 4 அணிகளுடன் தலா ஒரு முறையும், ஒரு அணியுடன் மட்டும் 2 முறையும் மோத வேண்டும். இவ்வாறு ஓர் அணி மொத்தம் 14 லீக்கில் விளையாட வேண்டும். லீக் சுற்று முடிவில் முதல் 4 இடங்களைப் பிடிக்கும் அணிகள் பிளேஒப் சுற்றுக்குத் தகுதி பெறும்.

மார்ச் 22ஆம் திகதி கொல்கத்தா ஈடன் கார்டனில் நடக்கும் தொடக்க ஆட்டத்தில் நடப்பு சம்பியன் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி, பெங்களூரு றோயல் சலஞ்சர்ஸுடன் மோதுகிறது.

5 முறை சம்பியனான மும்பை இந்தியன்ஸ் அணி தனது முதல் சவாலை பரம எதிரியான சென்னை சுப்பர் கிங்ஸுக்கு எதிராக தொடங்குகிறது. இந்த ஆட்டம் மார்ச் 23ஆம் திகதி சென்னை சேப்பாக்கத்தில் நடக்கிறது.

இந்த நிலையில், இந்த முதல் போட்டியில் விளையாட மும்பை அணியின் தலைவர் ஹர்த்திக் பாண்டியாவுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதற்கான காரணம் என்னவெனில், கடந்த சீசனில் மும்பை அணி 3 முறை குறிப்பிட்ட நேரத்தில் பந்து வீசி முடிக்கவில்லை. முதல் 2 போட்டிகளில் தலைவர் ஹர்த்திக் பாண்டியாவுக்கு அபராதம் மட்டும் விதிக்கப்பட்டது. ஆனால், தங்களது கடைசி லீக் ஆட்டத்திலும் குறிப்பிட்ட நேரத்தில் மும்பை பந்து வீசி முடிக்கவில்லை. இதனால் ஹர்த்திக் பாண்டியாவுக்கு ஐ. பி. எல். நிர்வாகம் ஒரு போட்டியில் விளையாடத் தடை விதித்தது. கடந்த முறை மும்பை அணி லீக் சுற்றோடு வெளியேறியதால் இந்த சீசனின் முதல் போட்டியில் ஹர்த்திக் பாண்டியா விளையாட முடியாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# அர்ஷ்தீப் சிங்தான் விளையாட வாய்ப்பு

டுபாய், பெப்.19

ஐ. சி. சி. சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் போட்டி பாகிஸ்தான் மற்றும் டுபாயில் நடத்தப்படுகிறது.

இந்தியா தனது முதல் ஆட்டத்தில் பங்களாதேஷுடன் நாளை 20ஆம் திகதி மோதுகிறது. இந்தத் தொடர் முழுவதும் இந்திய அணியின் ஆடும் அணியில் முன்னணி வேகப்பந்து வீச்சாளர் முகமது ஷமி இடம் பெறுவார் என்று தெரிகிறது. ஆனால் 2ஆவது வேகப்பந்து வீச்சாளர் இடத்துக்கு அர்ஷ்தீப் சிங் மற்றும் ஹர்ஷித் ராணா இடையே கடுமையான போட்டி நிலவுகிறது.

இந்த நிலையில் பங்களாதேஷுக்கு எதிரான முதல் போட்டிக்கான இந்தியாவின் ஆடும் அணியில் 2ஆவது வேகப்பந்து வீச்சாளராக அர்ஷ்தீப் சிங் இடம் பெறுவார் என்று தகவல் வெளியாகியுள்ளது. அவர் இடது கை பந்து வீச்சாளர் என்பதால் ராணாவை விட அவருக்கு வாய்ப்பு கொடுக்கப்படும் சந்தர்ப்பம் அதிகம். (எ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறீதரனை...

கேள்வி ஒன்றுக்கு பதிலளித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழ் அரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலாளராக எம். ஏ. சுமந்திரன் தெரிவான நிலையில் கட்சியின் முடிவுகளில் மாற்றங்கள் ஏற்படுமா என்று கேட்டதற்கு அவர், "அவ்வாறான எதுவும் இனி இடம்பெற வாய்ப்பிருக்காது. சிறீதரனைக் கூட கட்சியிலிருந்து வெளியேற்ற இடமளிக்கப்படாது - என்றார். (ஐ- 05)

## சைக்கிளில்...

சுண்டுக்குளியை சேர்ந்த பெனடிக் ஜோசப் பாஸ்கரன் (வயது - 61) என்பவரே உயிரிழந்தார்.

உயிரிழந்த நபர் சைக்களில் யாழ்ப்பாணம் நோக்கி சென்று கொண்டிருந்தார். அச்சமயம் பின்னால் வந்த டிப்பர் அவரை மோதித் தள்ளியது. இதில், அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்று விபத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

விபத்தை ஏற்படுத்திய சாரதியை யாழ்ப்பாணம் பொலிஸார் கைது செய்துள்ளனர். விசாரணைகளையும் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## சூரிய...

உற்பத்திக்கும் தேவைக்கும் இடையில் சமநிலையின்மை ஏற்பட்டது. இது ஒட்டுமொத்த மின் தடைக்கு காரணமாக அமைந்தது - என்று ஆய்வில் தெரியவந்துள்ளது.

இந்த நிலையில், மீண்டும் இவ்வாறான நிலைமை ஏற்படாது தவிர்ப்பதற்கு சில மின்னுற்பத்தி இயந்திரங்களை குறைந்த இயக்க மட்டத்தில் பேணுதல்,

சிக்கல்களைத் தவிர்ப்பதற்கு தேவை ஏற்படும்போது, குறைந்த கேள்வி நிலவும் காலங்களில், சூரிய சக்தி மின் உற்பத்தியை குறைத்தல் என்பன பரிந்துரைகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. (ஐ)

## உள்ளூராட்சி...

பாதைகள் வேறு வேறாக இருந்தாலும் தங்களின் நிலைப்பாடுகளில் இருந்து கொண்டு ஒன்றிணைவது அவசியமாகும்.

இதில், உரிமை போராட்டத்தில் பங்கெடுத்த அனைத்து போராளி கட்சிகளும் அடங்குவனவாக இருக்க வேண்டும். அத்துடன், அது தொடர்பான கருத்தாடல்கள் கட்சிகளின் தலைவர்களுடன் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

தற்போது அனைவரும் ஒரு பொதுத் தளத்துக்கு வருவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அது நிறைவுற்ற பின்னரே தேர்தலில் தற்போதைய களச் சூழலுக்கேற்ப எவ்வாறு ஒரே நிலைப்பாட்டுடன் போட்டியிடுவது என்பதை தீர்மானிக்க முடியும். அது மட்டுமல்லாது கூட்டாகப் போட்டியிடுவதா இரண்டு அல்லது மூன்று தரப்புகளாக வாக்குகள் சிதறாதவாறு போட்டியிடுவதா என்பது பற்றியும் அடைவை எட்ட முடியும்.

மேலும், தமிழ்த் தரப்பின் போட்டியாளர்கள் எந்த ஒரு கட்சியும் மற்றைய தரப்பின் மீது காழ்ப்புணர்ச்சியுடன் செயல்படாது - சேறுபூசல்களை முன்னெடுக்காது ஒரே குறிக்கோளுடன் வெற்றி இலக்கை அடையும் பொறிமுறையை உள்ளடக்கும் வகையில் சகல தமிழ்க் கட்சிகளும் ஒன்றிணைந்து இதற்கான கள நிலையை உருவாக்க வேண்டும்.

அந்த வகையில் அவரவர் தத்தமது சுயத்தோடு - ஒருமித்த கருத்தோடு வெற்றி வாய்ப்பு களச்சூழல் யாருக்கு பொருத்தமாக இருக்குமோ அதற்கேற்ப நகர்வுகளை முன்னெடுப்பது அவசியம் - என்றார். (ஐ -05)

# மார்ச் 21இற்கு பின்னரே தேர்தலை அறிவியுங்கள்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் கோரிக்கை

கொழும்பு, பெப். 19

மார்ச் 21ஆம் திகதியின் பின்னர் தேர்தலுக்கான தினத்தை அறிவிக்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர்களை சந்தித்த பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான புதிய வேட்புமனு கோரலுக்கான சட்ட மூலத்துக்கு எந்த நிபந்தனையுமின்றி நாம் ஆதரவளித்துள்ளோம். மார்ச் 21ஆம் திகதி வரை பாராளுமன்றத்தில் வரவு - செலவு திட்ட விவாதத்தில் எதிர்க்கட்சி என்ற ரீதியில் ஆற்ற வேண்டிய பணிகள் பல உள்ளன.

எதிர்வரும் 25ஆம் திகதியின் பின்னர் ஆரம்பமாகவுள்ள குழுநிலை விவாதத்தில் எதிர்க்கட்சிகள் பங்கேற்க வேண்டியது அவசியமானதாகும். எனவே, இந்த வரவு - செலவு திட்ட விவாத காலத்தில் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் அவர்களின் அரசமைப்பு ரீதியான கடமையை நிறைவேற்றுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும்.

எனவே, மார்ச் 21ஆம் திகதியின் பின்னர் தேர்தலுக்கான தினத்தை அறிவிக்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுத்திருக்கின்றோம். எதிர்க்கட்சிகள் தேர்தலை காலந்தாழ்த்துமாறு கோருகின்றன என்று சிலர் குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றனர்.

பாராளுமன்ற செயல்பாடுகள் எந்தளவுக்கு சிக்கலானவை என்பது புதிதாக வந்தவர்களுக்கு தெரியாது. எனவே, அவர்கள் இவ்வாறு குற்றச்சாட்டுகளை முன்வைப்பது ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல. ஆளும் தரப்பிலுள்ள சிலர் தேர்தல் ஆணைக்குழுவை தமது கைப்பாவையாக காண்பிக்க முற்படுகின்றனர். இது தவறாகும்.



பாராளுமன்றத்தைக் கூட்டி சட்ட மூலங்களை முன்வைத்து அவற்றை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளை எடுக்கக் கூடிய அதிகாரம் ஆளுங்கட்சிக்கு உண்டு.

ஆனால், தேர்தலை நடத்தும் தினத்தையோ, வேட்புமனு தாக்கலுக்கான காலத்தையோ அரசாங்கத்தால் தீர்மானிக்க முடியாது. அரசாங்கத்தின் தாளத்துக்கு நடனமாடுவதற்கு எதிர்க்கட்சிகளோ - தேர்தல் ஆணைக்குழுவோ தயாராக இல்லை - என்றார். (ஐ)

# பழுதடைந்த நெல்லை கலந்து விற்ற களஞ்சியசாலையில் சுற்றிவளைப்பு

கொழும்பு, பெப். 19

மின்னேரியா பிரதேசத்தில் நெல் மற்றும் பழுதடைந்த நெல்லை கலந்து விற்பனை செய்து வந்த நெல் களஞ்சிய சாலை ஒன்றை நுகர்வோர் விவகார அதிகாரசபை அதிகாரிகள் சுற்றிவளைத்தனர்.

பழுதடைந்த நெல்லுடன் கலந்த சுமார் 6,000 கிலோ நெல் குறித்த களஞ்சியசாலையிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டதாக நுகர்வோர் விவகார அதிகாரசபை தெரிவித்துள்ளது.

சம்பந்தப்பட்ட நெல் களஞ்சிய சாலைக்கு சீல் வைக்க நுகர்வோர் விவகார அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொண்டனர்.

அதன்படி, களஞ்சியசாலையின் உரிமையாளரை எதிர்வரும் 21ஆம் திகதி நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தவும் நுகர்வோர் விவகார அதிகாரசபை அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தனர்.

கைப்பற்றப்பட்ட நெல் கையிருப்பு சந்தைக்கு வெளியிடப்பட்டிருக்க முடியுமா அல்லது விலங்குகளின் தீவனத்திற்காக அனுப்பப்பட்டதா என்பது தெளிவாகத் தெரியவில்லை என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர். (அ)

## இந்தியாவை...

யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கிராமிய அமைப்புகளின் தலைவர் செல்லத்துரை நற்குணம் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சமாசத்தில் நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், கடந்த வாரம் சீன தூதரக அதிகாரிகளை எமது கடற்றொழிலாளர் சங்க பிரதிநிதிகள் யாழ்ப்பாணத்தில் சந்தித்தோம். அவர்களை சந்தித்ததன் நோக்கம் கடந்த கொரோனா காலம் மற்றும் இந்திய இழுவைமடி படகுகளால் பாதிக்கப்பட்ட எமது மீனவர்களுக்கு பல்வேறு உதவிகளை செய்தார்கள்.

அவர்கள் செய்த உதவிக்கு நன்றியை தெரிவித்ததோடு தொடர்ந்தும் இந்திய இழுவைமாடியால் பாதிக்கப்பட்டு வரும் எமது மீனவர்களுக்கு உதவி செய்யுமாறு கோரிக்கை விடுத்தோம்.

இதே கோரிக்கையை இந்தியா அரசிடமும் முன் வைத்திருக்கிறோம். யார் எமது மக்களுக்கு உதவிக்கரம் நீட்டினாலும் அதை நாம் பெற்றுக் கொள்ள தயாராக இருக்கிறோம்.

இந்திய இழுவைமடிப் படகுகளால் தொடர்ச்சியாக நாம் பாதிக்கப்பட்டு வரும் நிலையில் சீனா எமக்கு உதவி செய்கிறோம் என்று எமது கடல் பிராந்தியத்தால் இந்திய தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் விடும் வகையில் எம்மை பயன்படுத்த எதிர்பார்த்தால் அதைச் செய்ய முடியாது .

இந்தியா எமது அயல் நடு அது மாத்திரமல்ல எமது தொப்புள் கொடி உறவு என்ற ரீதியில் இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக எமது கடலை பயன்படுத்த அனுமதிக்கப் போவதில்லை - என்றார். (ஐ-05)

## ஆசிரியர்...

கல்வி அமைச்சருமான ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை வாய்மூல விடைக்கான கேள்வி வேளையில் சாமர சம்பத் தசநாயக்க எம்பி எழுப்பிய கேள்விக்கு பதிலளித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஷாமர சம்பத் தசநாயக்க எம். பி., "மாகாண சபை பாடசாலைகளிலிருந்து தேசிய பாடசாலைகளுக்கு ஆசிரியர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டார்கள். எனினும் அதற்கான கால எல்லையை மீண்டும் நீடிக்காமல் இருப்பதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்பதை கல்வி அமைச்சர் அறிவாரா? என்று கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த பிரதமர், தேசிய பாடசாலைகளிலிருந்து மேலதிகமாக காணப்படும் ஆசிரியர்களை மாகாண பாடசாலைகளுக்கும் மாகாண பாடசாலைகளில் மேலதிகமாக காணப்படும் ஆசிரியர்களை தேசிய பாடசாலைகளுக்கும் நியமிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

எனினும், நீதிமன்றத்தில் அது தொடர்பான வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்ட நிலையில் அது நிறுத்தப்பட்டிருந்தது. எனினும், பின்னர் கிடைத்த நீதிமன்ற தீர்ப்பையடுத்து மீண்டும் அதற்கான வாய்ப்பு கிடைத்துள்ளது.

அந்த வகையில் இந்த வருட இறுதிக்குள் நாடளாவிய ரீதியில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (ஐ)

# கெஹலியவுக்கு எதிரான விசாரணை ஒத்திவைப்பு

கொழும்பு, பெப். 19

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல மற்றும் அரச அச்சக கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் ஜயம்பதி பண்டார ஹின்கந்த ஆகியோருக்கு எதிராக இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவினால் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணையை எதிர்வரும் ஜூன் மாதம் 13 ஆம் திகதி வரை ஒத்திவைக்க கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்று கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சுஜீவ நிஷங்க முன்னிலையில் அழைக்கப்பட்டிருந்த போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கெஹலிய ரம்புக்வெல வெகுஜன ஊடகத்துறை அமைச்சராகக் கடமையாற்றிய காலத்தில் தனது கையடக்கத் தொலைபேசியின் கட்டணத்துக்கு செலுத்த வேண்டியிருந்த 2 இலட்சத்து 40 ஆயிரம் ரூபா பணத்தை, அரச அச்சக கூட்டுத்தாபனத்தின் நிதியைப் பயன்படுத்திச் செலுத்தியதால் அரசாங்கத்துக்கு நட்டம் ஏற்பட்டுள்ளதாக கெஹலிய ரம்புக்வெல மற்றும் அரச அச்சக கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் ஆகியோருக்கு எதிராக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## யுத்தமும்...

இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டின் பொருளாதாரம் மிளிர வேண்டுமெனில் நல்லிணக்கம் அவசியம்.

தூய்மையான இலங்கையை கட்டியெழுப்ப புலம்பெயர் மக்களை அழைக்க முன்னர் தமிழர்களின் பிரச்னையை கவனம் செலுத்துங்கள். தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளை நிறைவேற்றுங்கள்

இனப்பிரச்னை இலங்கையில் இருக்கின்றது என்பதை உணருங்கள். தமிழ் தேசிய இனத்திற்கு அங்கீகாரம் வழங்காத வரை பலனில்லை - என்றார். (அ)

## எரிபொருள்...

நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றிய அமைச்சர், எரிபொருள் வரி தொடர்பான விரிவான அறிக்கை விரைவில் சபையில் சமர்ப்பிக்கப்படும்.

ஏற்கனவே உள்ள 50 ரூபா எரிபொருள் வரியை குறைப்பதாக அரசாங்கம் முன்னர் வழங்கிய வாக்குறுதி தொடர்பில் சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இந்த விடயத்தைக் கூறினார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# குரங்குச் சம்பவத்தை நினைவுபடுத்தாதீர்!

## அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ கோரிக்கை

கொழும்பு, பெப். 19

குரங்கு சம்பவம் தற்போது முடிந்துவிட்டது என்றும், எதிர்க்கட்சியினர் குரங்கு சம்பவத்தை எப்போதும் நினைவுபடுத்த வேண்டாம் என்றும் அரசாங்கத்தின் பிரதம கொறடா அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ கேட்டுக் கொண்டார்.

தேசிய மின்சாரக் கட்டமைப்பை முடக்குவதற்கு குரங்கு ஒன்று காரணமாக அமைந்த சம்பவம் தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போது அவர் இவ்வாறு கூறினார்.

பாணந்துறை துணை மின் நிலையத்தில் ஏற்பட்ட குரங்கு சம்பவம் எவ்வாறு மின் தடைக்குக் காரணமாக அமைந்தது என்றும், நாடு தழுவிய மின் தடையை ஒரு விலங்கு ஏற்படுத்தியது இதுவே முதல் முறையா என்றும் பாராளுமன்ற உறுப்பினர் கருணாநாயக்க, நிலையியற் கட்டளை 27ஃ2 இன் கீழ் கேள்வி எழுப்பினார்.

அரசாங்கத்தின் பிரதம கொறடா நளிந்த ஜயதிஸ்ஸ, மின்சார சபை, மின் அமைப்பில் உள்ள ஏற்றத்தாழ்வுக்கு ஒரு நிரந்தர தீர்வைக் காண முயற்சித்து வருவதாகக் கூறினார்.

"அமைப்பில் உள்ள ஏற்றத்தாழ்வுக்கு மின்சாரசபை ஒரு தீர்வைக் கண்டுபிடித்து வருகிறது. குரங்கு சம்பவம் இப்போது முடிந்துவிட்டது, அதை இங்கே எப்போதும் நினைவூட்ட வேண்டாம்" என்று அவர் கூறினார். (அ)

# மதுபானம், சிகரெட் விலை உயராது

கொழும்பு, பெப். 19

வரவு செலவுத் திட்டத்தில் மதுபானம் மற்றும் சிகரெட் விலைகள் அதிகரிக்கக் கூடும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் மதுபானம் மற்றும் சிகரெட் வகைகளின் விலை அதிகரிக்கப்படாது என மதுவரித் திணைக்களத்தின் தலைவர் தெரிவித்தார்.

இந்த ஆண்டு ஜனவரி மாதம் மதுபான மற்றும் சிகரெட் வகைகளின் விலைகள் அதிகரிக்கப்பட்டிருந்தன.

எனவே வரவு-செலவுத் திட்டத்தின் ஊடாக மீண்டும் விலை அதிகரிக்கப்படாது என தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த ஜனவரி மாதம் 11ஆம் திகதி மதுபான வகைகள் லீற்றர் ஒன்றின் விலை 6 வீதத்தினாலும் சிகரெட் வகைகளின் விலை 5 முதல் 10 ரூபாவினாலும் உயர்த்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# வாகன இறக்குமதி மிகவும் ஆபத்தானது

## ஹர்ஷ டி சில்வா எச்சரிக்கை

கொழும்பு, பெப். 19

தற்போதைய நிலையில் வாகனங்களை இறக்குமதி செய்வது ஆபத்தானது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

வரவு செலவுத் திட்டம் மீதான இரண்டாம் வாசிப்பு விவாதத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை கலந்து கொண்டு உரையாற்றும் போதே பாராளுமன்ற உறுப்பினர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

எனக்கு ஜப்பானிய கார் வாங்கவேண்டும் என்ற கனவு இருந்தது. 14 லட்சத்துக்கு ஒரு விட்ஸ் வாங்க முடியும் என்று யார் சொன்னது?

டொயோட்டா ரேய்ஸ் 122 லட்சமும், யாரிஸ் 185 லட்சமும், ப்ரியஸ் 289 லட்சம் என தற்போது விலை உயர்ந்துள்ளது. இங்கே தான் பாரிய குழப்பம் ஏற்பட்டுள்ளது.

தனது வரவு - செலவுத் திட்ட உரையில் பெரும்பாலான வரி வருவாயை வாகன இறக்குமதியிலிருந்து எதிர்பார்க்கப்படுவதாக ஜனாதிபதி கூறியுள்ளார்.

வாகனங்களின் விலைகள் குறிப்பிடத்தக்க அளவில் உயர்ந்துள்ளது. எனவே வாகனங்களை இறக்குமதி செய்வது மிகவும் ஆபத்தானது.

ஏனென்றால் இவ்வளவு விலைக்கு யார் வாகனங்களைக் கொண்டு வருவார்கள்? இலங்கையில் இது போன்ற வாகனங்களை வாங்கும் அளவுக்கு பணக்காரர்கள் இருப்பதாக நான் நினைக்கவில்லை - என்றார்.

# மக்களை ஏமாற்றும் பட்ஜெட் முன்வைப்பு!

## ஹர்ஷ எம்.பி. குற்றச்சாட்டு



கொழும்பு, பெப். 19

**அரசாங்கம் மக்களுக்கு வழங்கிய உறுதிமொழிகளை நிறைவேற்றாமல் ஏமாற்றும் வகையிலான வரவு-செலவுத் திட்டத்தை சமர்ப்பித்துள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.**

பாராளுமன்றத்தில் நேற்று 2025 ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான முதலாம் நாள் விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் புதிய முறைமை மாற்றம் ஏற்படும் என மக்கள் எதிர்பார்த்திருந்தார்கள்.

ஆயினும் அவ்வாறானதொரு மாற்றம் வரவு-செலவுத் திட்டத்தில் இல்லை. புதிய பொருளாதாரத் திட்டங்களும் கிடையாது.

கடன் மறுசீரமைப்பின்போது நாட்டு மக்களுக்கு ஏற்பட்ட பிரச்னை குறித்து ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க ஒரு வார்த்தை கூட பேசவில்லை.

சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தில் மாற்றத்தை ஏற்படுத்துவதாகக் கூறினார்கள்.

ஆயினும் ஒப்பந்தத்தை அவ்வாறே பின்பற்ற வேண்டும் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

அவ்வாறாயின் நாட்டு மக்களுக்கு அளித்த உறுதிமொழிகளுக்கும் அரசாங்கத்தின் தற்போதைய செயற்பாடுகளுக்கும் பரஸ்பர முரண்பாடு காணப்படுகிறது - என்றார். (அ)

# நாணய நிதிய நிறைவேற்றுச் சபை எதிர்வரும் 28ஆம் திகதி கூடுகிறது!

## இலங்கையின் 3ஆவது மீளாய்வுக்காக

கொழும்பு, பெப். 19

இலங்கைக்கான நீடிக்கப்பட்ட நிதி வசதியின் கீழான மூன்றாவது மீளாய்வு தொடர்பில் பரிசீலிப்பதற்காக, சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுச் சபை எதிர்வரும் 28 ஆம் திகதி கூடவுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுச் சபையின் எதிர்வரும் கூட்டங்கள் தொடர்பான அறிவிப்பில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

நீடிக்கப்பட்ட நிதி வசதி திட்டத்தின் கீழான மூன்றாவது மீளாய்வின் பின்னர் சர்வதேச நாணய நிதியம் இலங்கையுடன் கடந்த நவம்பர் மாதம் 23 ஆம் திகதி பணியாளர்கள் மட்ட இணக்கப்பாட்டை எட்டியது.

இதன்படி, சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்று சபை மூன்றாவது மீளாய்வைப் பரிசீலித்து அங்கீகரிக்குமாயின் இலங்கைக்கு நீடிக்கப்பட்ட கடன் வசதியின் கீழ் நான்காவது தவணையாக மேலும் 333 மில்லியன் அமெரிக்க டொலர் கடனுதவி கிடைக்கப் பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

# ரணிலின் வரவு - செலவுத் திட்டத்தின் அட்டைப் படம் மாத்திரமே மாற்றம்!

## ஐக்கிய தேசியக் கட்சி கிண்டல்



கொழும்பு, பெப். 19

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வரவு செலவுத் திட்டத்தின் நீட்சியே தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் வரவு-செலவுத் திட்டம் என ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

அரசாங்கம் செய்ததெல்லாம் ரணிலின் வரவு - செலவுத் திட்ட புத்தகத்தின் பின் அட்டையில் உள்ள பெயரை மாற்றுவதுதான் என்றும் அபேவர்தன கூறி னார்.

வரவு - செலவுத் திட்டத்தில் உள்ள ஒரே புதிய திட்டம் கிளீன் சிறீலங்கா என்று கூறிய அபேவர்தன, அனைத்து திருத்தங்களும் பிற திட்டங்களும் ரணிலின் திட்டங்கள் என்றும் கூறினார்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்பந்தங்களின்படி வரவு-செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக வஜிர அபேவர்தன சுட்டிக்காட்டினார்.

ரணில் நாட்டை ஆட்சி செய்த 2024 ஆம் ஆண்டில் நாட்டின் வருமானம் நல்ல நிலையை எட்டியதை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஏற்றுக்கொண்டதாகக் கூறிய அபேவர்தன, இன்றைய சமூகத்தில் உள்ள அழுத்தமான அரிசி மற்றும் தேங்காய் பிரச்னைகளுக்கு வரவு - செலவுத் திட்டத்தில் விரைவான தீர்வுகள் எதுவும் இல்லை என்று கூறினார். (அ)

# தேர்தலை இலக்குவைத்து தயாரிக்கப்பட்ட பட்ஜெட்!

## உதய கம்மன்பில தெரிவிப்பு



கொழும்பு, பெப். 19

எதிர்கால தேர்தலை இலக்கு வைத்து வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக பிவித்துரு ஹெல உருமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிப்பது என்ற மாயையை அரசாங்கம் ஏற்படுத்தியுள்ளது.

உண்மையில் அவ்வாறானதொரு அதிகரிப்பு கிடையாது. 12 திட்டங்களுக்கு நிதி ஒதுக்கப்படவில்லை. தேசிய மக்கள் சக்தியின் கொள்கைப் பிரகடனத்தில் வெளியிடப்பட்ட விடயங்கள் வரவு - செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்படவில்லை.

இந்த வரவு - செலவுத் திட்டத்தின் மூலம் மக்கள் மற்றுமொரு முறை ஏமாற்றப்பட்டுள்ளனர்.

அரச ஊழியர்களுக்கு வழங்கப்படும் மேலதிக, இடைக்காலக் கொடுப் பனவுகள் நீக்கப்பட்டுள்ளன.

அவ்வாறாயின் உண்மையான சம்பள அதிகரிப்பு எண்ணாயிரத்து 250 ரூபாவாகும். இந்தத் தொகையில் ஐயாயிரம் ரூபா மாத்திரமே இவ்வருடம் வழங்கப்படும். இந்த வரவு - செலவுத் திட்டமானது ஒரு குழந்தையின் கடிதம் போன்றதாகும். வரவு - செலவுத் திட்டம் என்றால் என்னவென்பதை அறியாதவர்களால் அது தயாரிக்கப்பட்டுள்ளது - என்றார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 19.02.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org